22 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs

416.315.9397

www.mahendran.ca

Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca

நதி 22 | பாலம் 19 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 01, 2012

# மாறுகின்ற கனேடிய குடும்ப அமைப்பு

'முதல் தரமான நாடு உருவாக தரமான வலிமையான குடும்ப அமைப்பு தேவை'. இது யாவரினாலும் ஏற்கக் கூடியது. புதிய உலக அமைப்பில், மாறுகின்ற உலகத்தில் சகலவிடயங்களில் ஏற்படும் அபார மாற்றங்களை காண இந்த இருகண்களும் போதாது. தொழில்நுட்ப வளர்ச்சியே வாழ்க்கையை மாற்றி அமைத்து விட்டது. இதன் தொடர்ச்சியாக குடும்ப அமைப்பில் பலமாற்றங்கள் ஏற்படத்தொடங்கியுள்ளன. இது ஒரு ஆரம்பமே. இதற்கு நீண்ட தொடர்ச்சி உருவாகி வருவதை 2011 இல் எடுக்கப்பட்ட கனேடிய சனத்தொகை புள்ளிவிபரம் கட்டியம் கூறியுள்ளது. தகப்பன், தாய், பிள்ளைகள் என்ற முறைமாறி புதிய வார்ப்புகள் நடைமுறைக்கு வர ஆரம்பித்துள்ளன. திருமணம் செய்த குடும்பம் அவர்களிற்கு பிள்ளை, பிள்ளைகள் இதுவே நீண்டகால நடைமுறையிலிருந்த பாரம்பரிய குடும்ப அமைப்பு. புதிய கனேடிய குடும்ப அமைப்பிலும் தனியாக வாழும் முறை அதிகரிப்பதனையும் 2011 இற்குரிய கனடிய சனத்தொகை புள்ளிவிபரம் காட்டுகின்றது.

2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கனேடிய குடிசன மதிப்பீட்டில் இருந்து குடும்பம் பற்றிய தகவல்கள் செப்டம்பர் 20, 2012 இல் வெளியானது. கனேடிய குடும்பத்தின் வரைவிலக்கணம் பின்வருமாறு வரையறுக் கப்பட்டுள்ளது. "திருமணமான அல்லது திருமணமாகாமல் ஒன்றாக வாழ்கின்ற இருவர் (இருவரும் ஓர் இனமாகவும் (Same Sex) இருக்கலாம். அல்லது எதிர்ப்பாலர் ஆகவும் (Opposite Sex) இருக்கலாம்) அவர்களுக்கு பிள்ளை இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். அல்லது ஒரு பிள்ளையுடனாதல் ஒரே வீட்டில் சேர்ந்து வாழும் ஒற்றை பெற்றார் (Single Parent)".

மேற்கூறிய கனேடிய குடும்பத்தின் வரைவிலக்கணப்படி கனடாவில் 2011 இல் எடுக்கப்பட்ட கணிப்பின்படி 9.4 மில்லியன் குடும்பங்கள் வாழ்கின்றன. இது 2006 ஆம் ஆண்டில் இருந்ததை விட 5.5% அதிகமாகும். இவ் 9.4 மில்லியன் குடும்பங்களையும் இக்குடிசன மதிப்பீடு பின்வரும் 3 வகைகளாகப் பிரிக்கிறது.

1. 2011 இல் திருமணமானவர்களை கொண்ட குடும்பம் 67% ஆகவும் 1961 இல் 91.6% ஆகவும் இருந்தன.

2. 2011 இல் ஒற்றைப் பெற்றாரைக் கொண்ட குடும்பம் 16.3% ஆகவும் 1961இல் 8.4% ஆகவும் இருந்தன.

3. 2011 இல் திருமணமாகாமல் ஒன்றாக வாழ்வோரைக் கொண்ட குடும்பம் (Common - Law Couple) 16.7% ஆகவும் 1981 இல் 5.6% ஆகவும் இருந்தன. (இக்கணக்கெடுப்பு 1961 இல் எடுக்கப்படவில்லை.)



## இக்குடும்பங்களை பற்றி மேலும் சில விடயங்களை பார்ப்போம்.

1. 2011 இல் ஐந்து பேருக்கு மேற்பட்டவர்களை கொண்ட குடும்பம் 8.4% ஆகவும் 1961 இல் 32.3% ஆகவும் இருந்தன.

2. 2011 இல் குடும்பம் ஒன்றில் சராசரியாக 2.9 பேரும் 1961 இல் சராசரியாக 3.9 பேரும் இருந்தனர்.

3. கனடாவில் வாழும் 100,000 பேரில் விவாகரத்து செய்தோர் 2011 இல் 211 பேர் ஆகவும் 1961 இல் 36 பேர் ஆகவும் இருந்தனர்.

4. 2011 இல் கணக்கெடுக்கப்பட்ட குடும்பங்களில் 0.8% ஓரின சேர்க்கையாளர்களை (Same Sex Family) கொண்டது. இது 2006 ஆம் ஆண்டில் இருந்ததை விட 42.4% அதிகமாகும். இவர்களில் அரைவாசிப்பேர் திருமணம் செய்தவர்கள். மிகுதிப்பேர் திருமணம் செய்யாமல் ஒன்றாக வாழ்பவர்கள்.

கனேடிய குடும்பத்தில் 3.7 மில்லியன் குடும்பங்கள் மட்டுமே பிள்ளைகளுடன் வாழ்கின்றனர். இவர்களில் 87.4% மானவர் அந்த இரண்டு பெற்றோருக்கும் பிறந்த குழந்தைகளை மட்டுமே உடையவர்கள் (Intact Family). 7.4% மானவர் இரண்டு பெற்றோரில் ஒரு பெற்றோருக்கு பிறந்த பிள்ளைகளுடன் வாழ்பவர்கள் (Simple

தொடர்ச்சி 03ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E.
Suite #203
Scarborough, ON
M1S 0C2
*Independently Owned and Operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
9 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# REAL ESTATE

• RESIDENTIAL • INVESTMENTS

வீடு என்பது உங்கள் கனவு! தாயகம் என்பது உங்கள் நினைவு!!
இவை இரண்டையும் உங்கள் கண் முன் கொண்டுவருவேன்.

## இலங்கை சென்றுவர இருவருக்கு இலவச விமானச்சீட்டு

என்னிடம் வீடு வாங்குபவர்களுக்கு மட்டும் இரண்டு பேருக்கு விமானச்சீட்டு. இலங்கை சென்றுவர எந்த வித சீட்டு குலுக்கலுமின்றி வழங்கப்படும்.

இந்த சலுகை November 20, 2012 திகதி வரை என்னிடம் வீடு வாங்குபவருக்கு மட்டும்.



"உங்கள் கண் உள் இருக்கும் கனவுகளை உங்கள் கண்முன் கொண்டு வருவேன் உங்களுக்கு அதிஷ்டம் இல்லை என்று கவலையா! என்னிடம் வந்தாலே உங்களுக்கு அதிஷ்டம் தான்"

**Lourdson Antonipillai** (B.sc)
Sales Representative
Dir: 416-738-8824

Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229

HomeLife/Future Realty Inc., Brokerage*
205-7 Eastvale Drive, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated

HOMELIFE HIGHER STANDARDS



## Allstate Insurance Company Of Canada

Allstate. You're in good hands.

# Home & Auto Insurance





**Suren Navaratnarajah**
(Agent)

Cell: 416.520.6916

E-mail: snavaratnarajah@allstate.ca

4525 Kingston Road
Unit H5 Scarborough, ON M1E 2P1



## Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran**, P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

**HomeLife/GTA Realty Inc.** Brokerage *

5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666



## PRIVATE HOUSE FOR SALE
## 14 TH AVE. & 9TH LINE



Brand new freehold town house for sale. 3 Bedrooms, 3 washrooms, hardwood floors & stairs. Large open concept home.

Contact: 416.492.0297 / 416.318.9262 / 647.524.8464



## விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜே பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201,*
*TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.


## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: vlambaram.com*

# மாறுகின்ற கனேடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

Stepfamily). மிகுதி 5.2% மாணவர் இரண்டு பெற்றோருக்கு பிறந்த குழந்தைகளும் மற்றும் தனித்தனியே அதில் உள்ள ஒரு பெற்றோருடைய பிள்ளைகளுடனும் சேர்ந்து வாழ்கின்றனர் (Complex Stepfamily).



கனடாவில் ஒன்ராறியோ மாகாணத்தில்தான் இரு பெற்றோருக்கும் பிறந்த பிள்ளைகளுடன் வாழும் குடும்பம் (Intact family) அதிகம் உள்ளது. அதேபோல் குவிபெக் மாகாணத்தில்தான் கலப்பு பிள்ளைகள் கொண்ட குடும்பம் (Step family) அதிகம் உள்ளது.

தனியாக ஒருவர் வாழும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. 1961 இல் 9.3% ஆக இது இருந்தது. 2011 இல் 27.6% ஆக அதிகரித்துள்ளது.

## சிறீலங்காவின் மனித உரிமை மீறல்கள் பற்றி ஐ.நா சபையில் கரன் பார்கர்

இலங்கையில் தமிழ் மக்களுக்கும் விடுதலை புலிகளுக்கும் எதிராக சிங்கள அரசினால் மேற்கொள்ளப்பட்ட பாரியளவிலான மனித உரிமைச்சட்ட மீறல்கள் பயனுள்ள முறையில் இன்னமும் கவனிக்கப்படாமல் உள்ளதென்பதனை ஐ.நா மனித உரிமைச் சபையோருக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என மனித உரிமை பேராளர் கரன் பார்கர் அவர்கள் தெரிவித்துள்ளார். நடைபெற்று முடிந்துள்ள ஜெனீவா- ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 21வது கூட்டத் தொடரில் உரையாற்றும்போதே அவர் இக்கூற்றினைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தீவில் தமிழர்களுக்கான நீதியினைக் கோரி ஐ.நா மனித உரிமைச் சபையில் அவர் ஆற்றிய உரையில், எங்களின் பார்வையில் சிறிலங்கா அரசின் முயற்சிகள் உண்மையை கண்டறிதல், நீதி வழங்கல், நட்ட ஈடு வழங்கல், மேலும் இவை நடக்காதவாறு செய்தல் ஆகிய விடயங்களிலும் போதாமையாக உள்ளதோடு உண்மையை கண்டறிவதில் மேலும் தாமதம் ஏற்பட்டால் அது ஆபத்தானதாகும் என ஐ.நா மனித உரிமைச் சபையோருக்கு எடுத்துரைத்துள்ளார்.

இலங்கையில் 100,000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உயிர் இழந்ததை சிறிலங்கா அரசாங்கம் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனைச் சுட்டிக்காட்டிய கரன் பார்கர், "சிங்கள வெற்றிப் பெருமிதம்" என்று ஐ.நா பொதுச் செயலரின் நிபுணர் குழுவினர் கூறியதை நினைவில் கொள்ளும்போது தமிழ் மக்களுக்கு ஒரு போதும் உண்மை, நீதி, நட்ட ஈடு, தீர்வு என்பன கிடைக்கப் போவதில்லை என்ற அச்சத்தினையும் ஐ.நா மனித உரிமைச் சபையோருக்கு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஐ.நா மனித உரிமைச் சபையின் சிறப்பு கண்காணிப்பாளர்களை சிறிலங்காவுக்கு விரைவில் செல்ல ஐ.நா அனுமதி கோரும் என நம்புகிறோம் எனத் தெரிவித்தார்.

கரன் பார்கர் அம்மையார், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஐ.நா மனித உரிமைச் சபைக்கான வளஅறிஞர் குழுவின் பிரதிநிதியாகவும் நா.த.அரசாங்கத்தின் மதியுரைஞர் குழுவின் பிரதிநிதியாகவும் உள்ளார்.

## அமெரிக்க செனட் சபை உறுப்பினர்கள் ஹிலாரி கிளின்டனுக்கு கடிதம்!



இலங்கை தொடர்பில் அமெரிக்காவின் 31 செனட் உறுப்பினர்கள், அந்த நாட்டு இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கு கடிதம் ஒன்றை செப்ரெம்பர் 25 அன்று அனுப்பி வைத்துள்ளனர். அதில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகத்தில் அண்மையில் நிறைவேற்றப் பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில், இலங்கையுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது. இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னரும், இலங்கை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த இலங்கை அரசு போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும அதில சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதுவரையில் மேற்கொண்டதைப் போலவே, இலங்கை மீண்டும் சர்வதேச நாடுகளை ஏமாற்ற முனைவதாக அவர்கள் எச்சரித்துள்ளனர்.

## நல்லிணக்க விடயங்களில் இலங்கை உண்மைத்தன்மையை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்த வேண்டும்!



நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைப் பரிந்துரைகளை அமல்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் மெய்யான அர்ப்பணிப்பை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டுமென தென் மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் றொபர்ட் ஓ பிளக் தெரிவித்துள்ளார். சுதந்திரத்திற்கு முன்னதாக இருந்து அமெரிக்கா இலங்கையுடன் மிகவும் நெருங்கிய நட்புறவை பேணி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்ட அமர்வுகளில கலந்து கொண்டுள்ள இலங்கையின் ஆங்கில தொலைக்காட்சி ஊடகமொன்றுக்கு பிளேக் வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகளை துரித கதியில் அமல்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் கூடுதல் முனைப்பு காட்ட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், வடக்கு மாகாணசபைத் தேர்தல் உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். யுத்தத்தின் பின்னர் இலங்கையில் நல்லிணக்க முனைப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை என தாம் குறிப்பிடவில்லை என அவர் தெரிவித்துள்ளார். இடம்பெயர் மக்கள் மீள் குடியேற்றம் உள்ளிட்ட சில விடயங்களில் அரசாங்கம் சிறந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வடக்கின் பல பிரதேசங்களில் அரசாங்கம் உட்கட்டுமான வசதிகளை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கத்தை பாராட்ட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற வடக்கு மற்றும் கிழக்கில் அரசாங்கம் இரண்டு விதமான அணுகு முறைகளை பின்பற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஒரு ஆண்டில் மாகாணசபைத் தேர்தலை நடத்தியது எனவும், வடக்கில் தேர்தலை நடத்த சுமார் நான்கு ஆண்டுகள் செல்லக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நல்லிணக்க முனைப்புக்களை துரித கதியில் மேற்கொள்வதன் மூலம் யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களை ஆற்ற முடியும் என்பதே தமது நிலைப்பாடு என றொபர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

## யாழில் தமிழ் பௌத்த அறநெறிப் பாடசாலை!

யாழ்ப்பாணத்தில் பௌத்த மதத்தை நுழைக்கும் வகையில் தமிழ் - பௌத்த அறநெறிப்பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளதாக செய்தி வெளியாகி உள்ளது. யுத்தத்தின் பின்னர் யாழ். பழம் வீதியில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் பௌத்த சங்கம், இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதாக கூறிக்கொண்டு, மாணவர்களுக்கு சிங்கள வகுப்புக்களை நடத்திக் கொண்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக கந்தரோடைப்பகுதியில் காணப்படும் விகாரை அமைப்புக்களை முன்னிறுத்திக் காண்பித்துக் கொண்டு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்ற போர்வையில் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பௌத்த மயமாக்கலை செய்து வருகின்றது.

ஆனால் தமிழ் இலக்கிய வகைப்பாட்டின்படி சங்கமருவிய காலத்தின் பிற்பகுதியில் தமிழகத்தில் செல்வாக்குச் செலுத்தியிருந்த பௌத்த மதத்தினாலேயே அப்போது தமிழகத்துடன் அதிக தொடர்புகளைக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தில் இவ்வாறான விகாரை அமைப்புகள் வந்திருக்கலாம் என்ற கருத்துள்ளது. இந்நிலையில் யாழில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என கூறிக்கொண்டு, முற்றுமுழுதாக அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலின்படி பௌத்த மயமாக்கலுக்கான ஒரு வேலைத் திட்டமாகவே இது பார்க்கப்படுகிறது. இதேபோல் குறித்த தமிழ் பௌத்த அமைப்பின் தலைவரே வடக்கில் தான் ஆளுநராக நியமிக்கப்பட்டால் 50ஆயிரம் புத்தர் சிலைகளை நிறுவுவேன் என சபதம் செய்ததாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# அன்பும் அமைதியும் இரசாயனங்கள்

**சத்குரு, ஈஷா அறக்கட்டளை**



சத்குரு வாசுதேவ்

மகிழ்ச்சி என்றால் என்ன? இதைப் புரிந்து கொள்வதற்கு பலப்பல வழிகள் உள்ளன. ஒரு எளிமையான வழி, இப்போது நீங்கள் அமைதியை இழந்துவிட்டதாக வைத்துக் கொள்வோம். அமைதியை இழந்துவிட்டால், நீங்கள் முதலில் உங்கள் கணவருடனோ அல்லது மனைவியுடனோ சண்டை போடத் தொடங்குவீர்கள். அங்குதான் முதலில் ஆரம்பிக்கும், இல்லையா? பிறகு மெதுவாக பக்கத்தில் இருப்பவரோடு சண்டை போடுவீர்கள். அடுத்தது உங்கள் முதலாளியோடு சண்டை போடத் தொடங்குவீர்கள். உங்கள் முதலாளியோடு சண்டை போடும்போது, நீங்கள் ஒரு டாக்டரைப் பார்க்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என அனைவரும் புரிந்து கொள்கின்றனர், இல்லையா?

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

பிறகு ஒரு டாக்டரைப் பார்க்கிறீர்கள். அவரும் மாத்திரை கொடுக்கிறார். அந்த மாத்திரையை சாப்பிட்டவுடன் அமைதியாகி விடுகிறீர்கள். அந்த அமைதி குறைவான காலமாக இருக்கலாம். ஆனால் நீங்கள் அமைதியாகி விடுகிறீர்கள் இல்லையா? இந்த மாத்திரை என்பது ஒரு சிறிய இரசாயனத் துண்டு. இந்த இரசாயனத்தை முழுங்கியவுடன் உடல் அளவிலும் மன அளவிலும் அமைதியாகி விடுகிறீர்கள். இதை வேறு விதமாகச் சொல்வதென்றால், நீங்கள் அமைதி என்று எதை அழைக்கிறீர்களோ அது ஒரு குறிப்பிட்ட வகையான இரசாயனம் தான். மகிழ்ச்சி என நீங்கள் அழைப்பதும் வேறு வகையான ஒரு இரசாயனம் தான். துன்பம் என்று நீங்கள் அழைப்பதும் இன்னொரு வகையான இரசாயனம் தான். பதட்டம், அழுத்தம், கவலை, பயம், கிளர்ச்சி, களிப்பு இவையெல்லாம் வெவ்வேறு வகையான இரசாயனங்கள். ஒவ்வொரு மனித அனுபவத்திற்கும் பின்னால் ஒரு இரசாயன அடிப்படை உள்ளது.

சரியான இரசாயனத்தை நீங்கள் கொண்டிருந்தால் அமைதியும் மகிழ்ச்சியும்தான் உங்கள் இயல்பாக இருக்கும். அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது வாழ்வின் முடிவல்ல, வாழ்வின் தொடக்கம். அமைதியாகக் கூட நீங்கள் இல்லையென்றால் இன்னமும் நீங்கள் வாழ்க்கையைத் துவக்கவே இல்லை என்றுதான் அர்த்தம். முட்டாள்தனமான மனதில் மிகவும் சிக்கிப் போய் விட்டீர்கள். இன்னும் நீங்கள் வாழ்க்கையை ஆரம்பிக்கவே இல்லை. அமைதியாக இருப்பது, மகிழ்ச்சியாக இருப்பதும் ஞானோதயம் அடைவதைப் போன்று பெரியவிடயமல்ல.

காலை உணவையோ இரவு உணவையோ நீங்கள் அனுபவிக்க வேண்டுமானால் நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால் தான் முடியும், இல்லையா? உங்களுக்குள் போராட்டமாக இருந்தால், நீங்கள் உணவை அனுபவித்து உண்ண முடியுமா? நீங்கள் உயிருடன் இருக்க உண்பது என்பது தவிர்க்க முடியாதது. ஆனால் அதைச் சரியாக செய்யக்கூட மகிழ்ச்சி தேவைப்படுகிறது. எனவே அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது வாழ்க்கையின் தொடக்கம் தான். இல்லையா? உங்களால் அமைதியாகக் கூட இருக்க முடியவில்லை என்றால் உங்கள் வாழ்க்கையில் வேறு என்னதான் செய்யப் போகிறீர்கள்? ஆனால் தற்போது மன அமைதியைத்தான் வாழ்க்கையின் உயர்ந்த பரிமாணமாக மக்கள் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

ஆன்மீகவாதிகள் என்றழைக்கப்படுபவர்கள், அமைதியாக இருப்பதுதான் வாழ்வின் உச்சநிலை என்று சொல்லிவருவது மிகவும் துரதிஷ்டவசமானது. எப்படி உணவு என்பது உங்கள் உயிருக்கு ஒரு அடிப்படையோ அதேபோல அமைதி என்பதும் உயிருக்கு அடிப்படையான ஒன்று தான். அமைதி, மகிழ்ச்சி என்பது ஞானோதயம் பற்றியதல்ல. கடவுள் பற்றியல்ல. அது வாழ்க்கையின் துவக்கம், வாழ்க்கையின் இறுதியல்ல. துர்அதிர்ஷ்டவசமாக உலகில் பெரும்பாலானோர் வாழ்க்கையை இப்படி தொடங்காததால் தான் அதை வாழ்வின் இறுதி இலட்சியமாக பிரச்சாரம் செய்து வருகிறார்கள். நீங்கள் மன அமைதியுடன் இருக்க முடியவில்லை என்றால் உங்களால் அமைதியாக ஓரிடத்தில் உட்கார முடியாது. மகிழ்ச்சியாக சாலையில் நடக்கமுடியாது, உங்கள் வாகனத்தைக் கூட அனுபவித்து ஓட்டமுடியாது இல்லையா?

எனவே உங்களுக்குள் சரியான இரசாயனத்தை உருவாக்குவது மிகவும் முக்கியமானது. எப்படி வெளிச்சூழல் நன்மைக்காக ஒரு விஞ்ஞானம் உள்ளதோ, அப்படியே உள்நலத்திற்காகவும் ஒரு விஞ்ஞானம் உள்ளது. மிக நீண்ட நாட்களாக யோகா எனப்படும் அந்த விஞ்ஞானம் கவனிக்கப்படாமல் உள்ளது. வெளிப்புற விஞ்ஞானம் உங்களுக்கு சௌகர்யத்தையும் வசதியையும் தரமுடியும். ஆனால் அந்த சௌகர்யமும் வசதியும் உங்கள் வாழ்க்கையில் எந்த வழியிலும் மாற்றத்தை எடுத்துவராது. உள்சூழ்நிலைக்கான விஞ்ஞானமே சரியான நோக்கத்தை உங்களை இட்டுச் செல்லும்.







# நம்பிக்கையும் விசுவாசமும்

நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்குமுள்ள தொடர்பு எனக்கு நன்கு விளங்கிய படியால் நம்பிக்கையின் சக்தியை இன்று உணர்ந்து அனுபவிக்கின்றேன்.

நம்பிக்கையும் விசுவாசமும் ஒன்றிற் கொன்று நெருங்கிய தொடர்புடையவை யாதலால் அவற்றைப் பிரித்துப் பார்ப்பது சுலபமானதல்ல. நம்பிக்கையின்றி விசுவாசம் வராது என நீ சொன்னால் அது சரி. ஆனால் அதை மாற்றியும் சொல்லலாம். விசுவாசம் இருக்கா விட்டால் நம்பிக்கை வராது. கண்ணால் காணமுடியாத ஒன்று இருக்கிறது என்று பார்க்க முதல் புரிந்து கொள்வது விசுவாசம். காணமுடியாதது உண்மை யில் இருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்வது நம்பிக்கை. தான் விரும்புவதை ஆகர்ஷிக்கும் இதயத்தின் சக்திதான் விசுவாசம். இதயத்தின் விருப்பத்தை உருவாக்குவது நம்பிக்கை. நீ உண்மை என நம்புவதன் முழுமைதான் விசுவாசம். நம்பிக்கை எனும் பொருள் விசுவாசம் எனும் பெட்டியினுள்தான் வருகின்றது. விசுவாசம் தான் லட்டு. லட்டை உருவாக்கும் சீனிதான் நம்பிக்கை. ஒன்றை நீ விசுவாசித்தால் அது பலன்தரும் என உன்னை நினைக்க வைப்பது நம்பிக்கை. நம்பிக்கை இருந்தால் உனக்கு விசுவாசம் தானாகவே வரும். நீ நம்பிக்கை கொள்ளும்போது நீ விரும்பியது நிச்சயம் கிடைக்கும் என்பது ஏற்கெனவே உனக்கு தெரிந்து விடுகின்றபடியால் விசுவாசத்திற்கு இடமில்லாமல் போய் விடுகிறது.

நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்குமிடையில் இருக்கும் சின்ன வித்தியாசம் இன்றுவரை உன்னைக் குழப்பியிருக்கலாம். உனது இருபக்கத்திலும் நம்பிக்கையும் விசுவாசமும் உனது தோழர்களாக நிற்க இடம்கொடு. உனது இதயத்தின் விருப்பம் ஒன்றைத் தரும்படி விசுவாசத்துடன் இன்று பிரார்த்தனை செய். பின் உனது விசுவாசம் உனக்கு அதைத் தரும் என நம்பிக்கைகொள்.

**நான் விசுவாசத்துடன் நம்பி யாசிக்கும் சகலதும் எனக்கு கிடைக்கும் என இன்று மிக நம்பிக்கையுடன் மனதாரப் பிரார்த்தனை செய்கிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 208

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புருடி

# எல்லா பேமென்ரையும்
# ஒரு மோட்கேஜ் பேமென்ராக
# மாத்த வேணும்!

செய்யவேணும் செய்யவேணும் என்று
இப்படியே காலம் போகுது ?

உதுக்குத்தானே இப்ப வோக் - இன்
**மோட்கேஜ் கிளினிக்** நடக்குது. !
அங்க நேரபோனால்தான் உதுக்கு சரி! ! !

5Yr Fixed Rate 2.99 % OAC

சனிக்கிழமை தோறும் 9.00 am - 5.00 pm வரை



# 416-644-3555



**CENTUM Rapid Mortgages Inc.**
211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc.® ⟹ **"Rapid Response; Rapid Results"**
FSCO LIC # 10156

# விளையாட்டுத் தகவல்கள் 337

## டுவென்டி- 20 உலக கிண்ண தொடரின் சூப்பர்-8 போட்டிகள் தொடக்கம்

டுவென்டி-20 உலக கிண்ண தொடரின் சூப்பர்-8 போட்டிகள் தொடங்குகின்றன. நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் போட்டியில், இலங்கை அணி எழுச்சி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் நான்காவது டுவென்டி-20 உலக கிண்ண தொடர் நடக்கிறது. லீக் சுற்று போட்டிகளின் முடிவில் கத்துக்குட்டி அணிகளான ஜிம்பாப்வே, ஆப்கானிஸ்தான், அயர்லாந்து, வங்கதேசம் வெளியேறின. மீதமுள்ள 8 அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு சூப்பர்-8 சுற்று போட்டிகள் நடக்கின்றன. பிரிவு 1ல் இங்கிலாந்து, இலங்கை, நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள் மற்றும் பிரிவு 2ல் இந்தியா, அவுஸ்திரேலியா, தென் ஆப்ரிக்கா, பாகிஸ்தான் அணிகளும் இடம் பெற்றுள்ளன. முதல் சூப்பர்-8 போட்டியில் இலங்கை, நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. லீக் சுற்றில் ஜிம்பாப்வேயை 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இலங்கை அணி, தென் ஆப்ரிக்காவுக்கு எதிரான 7 ஓவர் போட்டியில், மோசமாக (32 ஓட்டங்கள்) தோற்றது. அணித்தலைவர் ஜெயவர்தனா, சங்ககரா, பின் வரிசையில் மாத்யூஸ், திரிமான்னே, பெரேரா, ஜீவன் மெண்டிஸ் பலம் சேர்க்கின்றனர். அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் மலிங்கா, ஓவருக்கு சராசரியாக 10 ஓட்டங்களுக்கு மேல் கொடுப்பது பெரும் பலவீனம். இதனால் குலசேகரா, பெரேராவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதேநேரம் தொடரில் அதிக விக்கெட்(6) வீழ்த்திய சுழல் நாயகன் அஜந்தா மெண்டிஸ், அணிக்கு பலம் சேர்க்கிறார். நியூசிலாந்து அணி முதல் லீக் போட்டியில் வங்கதேசத்தை 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. பின் பாகிஸ்தானிடம் தோற்றாலும், அணியின் துடுப்பாட்டத்தின் தரம் எவ்விதத்திலும் குறையவில்லை. அணிக்கு நல்ல தொடக்கம் தர கப்டில், வில்லியம்சன், பிராங்க்ளின், நிகோல் என வீரர்கள் மாறி மாறி இறங்கியும் இன்னும் நல்ல ஜோடி கிடைக்காமல் தடுமாறுகிறது. இத்தொடரில் சதம் அடித்த பிரண்டன் மெக்கலம், தனது பணியை சரியாக செய்கிறார். அணித்தலைவர் ராஸ் டெய்லர், ஜேக்கப் ஓரம் நம்பிக்கை தர வேண்டும். பந்துவீச்சில் சீனியர் வெட்டோரி, வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டிகளில் சொதப்பினார். வேகப்பந்து வீச்சில் மில்ஸ், டிம் சவுத்தி சிறப்பாக செயல்படுவர் எனத்தெரிகிறது.

## மேற்கிந்திய தீவுகள்- இங்கிலாந்து பலப்பரீட்சை

மற்றொரு போட்டியில் நடப்பு சாம்பியன் இங்கிலாந்து- மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதுகின்றன. லீக் சுற்றில் அவுஸ்திரேலியாவிடம் தோற்ற மேற்கிந்திய தீவுகள், அயர்லாந்திடம் வெற்றியை பகிர்ந்து கொண்டது. மொத்தத்தில் ஒரு வெற்றி கூட பெறாமல் சூப்பர்-8 சுற்றுக்கு நுழைந்தது. கெய்ல், சாமுவேல்ஸ், சார்லஸ், டுவைன் பிராவோ, போலார்டு அதிரடியாக ஓட்டங்கள் சேர்க்க வேண்டும். இந்தியாவுக்கு எதிரான மோசமாக தோற்ற இங்கிலாந்து அணிக்கு, சுனில் நரைனின் சுழல் பெரும் சிக்கலாக இருக்கலாம். ஹேல்ஸ், கீஸ்வெட்டர், மார்கன், லூக் ரைட் துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும் அணித்தலைவர் ஸ்டூவர்ட் பிராட், ஸ்டீவன் பின், பிரஸ்னன் கவனமாக செயல்பட்டால் நல்லது.

## டுவென்டி- 20 உலக கிண்ணம்: இலங்கை வெற்றி

டுவென்டி-20 உலக கிண்ண தொடரின் சூப்பர்-8 போட்டியின் ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது. சூப்பர்-8 போட்டியின் ஆட்டத்தில் இலங்கையும், நியூசிலாந்தும் மோதின. இதில் நியூசிலாந்து நாணய சுழற்சியில் வெற்றி பெற்று துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய நியூசிலாந்து அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 174 ஓட்டங்கள் எடுத்தது. இதனையடுத்து 175 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 174 ஓட்டங்கள் எடுத்தது. இந்நிலையில், இரு அணிகளும் சம நிலையில் ஓட்டங்கள் எடுத்துள்ளதால் ஆட்டம் சமனில் முடிந்தது. இதனையடுத்து சூப்பர் ஓவர் மூலம் வெற்றி- தோல்வி நிர்ணயிக்கப்பட்டது. இதன் மூலம் களமிறங்கிய இலங்கை அணி 1 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 13 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இதன் பின்னர் 1 ஓவரில் 14 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 1 விக்கெட் இழப்பிற்கு 7 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது. இதன் மூலம் இலங்கை அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## இந்திய வீரர்கள் தெரிவில் குழப்பம்

டி20 உலகக் கிண்ணத் தொடரின் லீக் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி "சூப்பர்-8" சுற்றுக்கு தயாராகி வருகிறது. இதில், 7 துடுப்பாட்ட வீரர்கள் "பார்முலாவை" தொடர்வதா அல்லது 5 பந்துவீச்சாளர்களுடன் களமிறங்குவதா என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது. ே'வாக்கிற்கு ஏற்பட்டுள்ள காயமும் சிக்கலை அதிகரித்துள்ளது. இலங்கையில் நடைபெற்று வரும் டி20 உலகக் கிண்ணத் தொடரின் லீக் போட்டிகள் முடிந்து இந்திய அணி தனது முதல் போட்டியில் வரும் 28ம் திகதி அவுஸ்திரேலியாவை சந்திக்கிறது. அவுஸ்திரேலியாவுக்கெதிரான போட்டியில், விளையாடும் 11 வீரர்களை தெரிவு செய்வதில் பெரும் குழப்பம் நிலவுகிறது. விரல் பகுதியில் காயம் அடைந்த ஷேவக்கிற்கு இங்கிலாந்துக் கெதிரான லீக் போட்டியில் ஓய்வு அளிக்கப்பட்டது. மூன்று மணி நேரம் நடந்த பயிற்சியிலும் இவர் பங்கேற்கவில்லை. அதே நேரத்தில் இர்பான் பதான் துடுப்பாட்ட பயிற்சி மேற்கொண்டார். இது அடுத்த போட்டியில் ஷேவாக் இடம் பெறுவாரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவருக்கு பதிலாக மீண்டும் இர்பான், தொடக்க வீரராக களமிறக்கப்படலாம்.

இது குறித்து இந்திய அணியின் நிர்வாகி ஒருவர் கூறுகையில், ஷேவாக் நல்ல உடற்தகுதியுடன் தான் உள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டிக்கு முன் இவரது காயத்தின் தன்மை அதிகரித்து விடக் கூடாது என்பதற்காகவே ஓய்வு அளிக்கப்பட்டது என்றார். இங்கிலாந்துக் கெதிரான லீக் போட்டியில் ஹர்பஜன், 4 விக்கெட் வீழ்த்தினார். இதையடுத்து 7 துடுப்பாட்ட வீரர்கள் பார்முலாவை கைவிட்டு 5 பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கலாம் என்ற கருத்து இந்திய அணியில் எழுந்துள்ளது. அவுஸ்திரேலிய அணியை எப்போதும் அச்சுறுத்தும் ஹர்பஜனை தவிர்க்க இயலாது. வார்னர், மைக்கேல் ஹஸ்சி போன்ற இடது கை துடுப்பாட்ட வீரர்களை சமாளிக்க இவர் கட்டாயம் இடம் பெற வேண்டும். தமிழக சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின் வாய்ப்பு பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், பியுஸ் சாவ்லா இடம் கேள்விக் குறியாகிறது. ஊக்கமருந்து சோதனை இந்திய வீரர்கள் அஷ்வின், சேவக், ஹர்பஜனிடம் ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட்டது. இதுகுறித்து அணி மானேஜர் ஆர்.என்.பாபா கூறுகையில், ஐ.சி.சி., நடத்தும் தொடர்களில், பயிற்சியின் போது அனைத்து அணி வீரர்களிடமும் ஊக்கமருந்து சோதனை நடத்தப்படும். இது வழக்கமான ஒன்றுதான் என்றார்.

## ஐ.சி.சி.யின் தரவரிசை பட்டியல்: தென் ஆப்ரிக்கா முதலிடம்

சர்வதேச டுவென்டி-20 போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்(ஐ.சி.சி) கொழும்பில் வெளியிட்டது. இப்பட்டியலில் தென் ஆப்ரிக்க அணி முதலிடம் பிடித்துள்ளது. முதலிடத்தில் இருந்த இங்கிலாந்து அணி, இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டது. இதில் இந்திய அணி ஏழாவது இடத்தில் இருந்து நான்கு இடங்கள் முன்னேறி மூன்றாவது இடம் பிடித்தது. இலங்கையில் நடக்கும் டுவென்டி-20 உலக கிண்ண தொடரின் லீக் போட்டியில், நடப்பு சாம்பியன் இங்கிலாந்தை 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியதே இம்முன்னேற்றத்துக்கு காரணம். துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியல்: துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசை பட்டியலில், முதல் மூன்று இடங்களில் முறையே பிரண்டன் மெக்கலம் (நியூசிலாந்து), கிறிஸ் கெய்ல் (மேற்கிந்திய தீவுகள்), ஷேன் வாட்சன் (அவுஸ்திரேலியா) ஆகியோர் உள்ளனர். இந்தியாவின் சுரேஷ் ரெய்னா 5வது இடத்தில் நீடிக்கிறார். பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியல்: பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலில் முதல் மூன்று இடங்களில் சயீத் அஜ்மல் (பாகிஸ்தான்), சுவான் (இங்கிலாந்து), அஜந்தா மெண்டிஸ் (இலங்கை) ஆகியோர் உள்ளனர்.

ஆல்-ரவுண்டர்களுக்கான தரவரிசை பட்டியல்: ஆல்-ரவுண்டர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் வாட்சன் (அவுஸ்திரேலியா), முகமது ஹபீஸ் (பாகிஸ்தான்), அப்ரிதி (பாகிஸ்தான்) ஆகியோர் உள்ளனர். இப்பட்டியலில் முதலிடத்தில் இருந்த வங்தேச வீரர் சாகில் அல் ஹசன், 5வது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

## ரொனால்டோவின் அதிரடியில் ரியல் மாட்ரிட் அபார வெற்றி

சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டித் தொடரில் ரியல் மாட்ரிட், மான்செஸ்டர் சிட்டி அணிகள் மோதின. மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில், இரு அணிகளும் 2- 2 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தன. இந்நிலையில் ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ அபாரமாக கோல் அடித்து ரியல் மாட்ரிட் அணிக்கு வெற்றியை வசப்படுத்தினார்.



**எஸ். கணேஷ்**






# வீடு விற்பனையில்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

உதாரணமாக ஒரு வீடு கட்டுவதற்கான குறிப்பிட்ட தொகைப்பணம் செலுத்தியே உத்தரவு (Permit) பெறுதல் வேண்டும். ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளும் தமது பகுதிகளிற்கான வீதிகள், தண்ணீர், கழிவுகுழாய்கள் அமைப்பது, பராமரிப்பது போன்ற செலவுகளிற்கு இந்த வருமானத்தையே செலவிடுகின்றன. பீல் பெரும்பாகம் (Peel Region) இந்த தொகையை கிட்டத்தட்ட $18,000 ஆல் அதிகரிக்க உள்ளது. இது கிட்டத்தட்ட ஏற்கெனவே இருந்த பெறுமதியில் 99% அதிகரிப்பாகும். மிசிசாகா (Mississauga, பிறம்ரன் (Brampton), மற்றும் கலிடன் (Caledon) மாநகர சபையின் அங்கத்தினர் (councillors) இந்த அதிகரிப்பு சார்பாக வாக்களித்துள்ளனர். தனிக்குடித்தனம் இருக்கும் வீடுகளிற்கு $17,830 இலிருந்து



$35,532 ஆக அதிகரிக்கப்பட உள்ளது. ஏற்கெனவே உத்தர பெற்ற வீடுகளிற்கு இந்த அதிகரிப்பு பாதிப்பை ஏற்படுத்தாது. புதிதாக கட்டப்பட இருக்கும் வீடுகளின் விலையில் இந்த உத்தரவுப்பத்திர அதிகரிப்புச் செலவு நிச்சயமாக பாதிப்பை ஏற்படுத்தும்.

# வீடு விற்பனையில் மாற்றம்!

அடுக்குமாடி மனைகளின் விலையில் அதிகரிப்பு, புதிதாக கட்டப்படும் மனைகளின் அளவை குறைக்கச் செய்தது. 3 அறை மனையின் அளவுகள் 1000 - 1500 -1700 சதுரஅடி கொண்ட பல அடுக்குமாடி மனைகளை 1980களில் காணக்கூடியதாக இருந்தது. இந்த அளவு 2000 ஆம் ஆண்டுகளில் வெகுவாக சிறுத்துவிட்டது. எண்ணிக்கையில் அதிக கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் மனைகளின் அளவு மிகவாகக் குறைந்து விட்டது. விலை அதிகரிப்பை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க, அடுக்குமாடி நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் மனைகளின் அளவைக் குறைக்கத் தொடங்கின. சிறிய அளவிலான மனைகள் கொங் கொங் (Hong Kong), நீயூயோர்க் போன்ற இடங்களில் பல ஆண்டுகளிற்கு முன்பே ஆரம்பித்துவிட்டது. இந்த படிம வளர்ச்சி கனடாவில் குறிப்பாக வன்கூவர், ரொறொன்ரோ நகரங்களில் இப்போது மிகஅதிகமாக காணப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டிற்கும் 2011 ஆம் ஆண்டிற்கும் இடையிலான குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரங்களின்படி அதிகமானவர்கள் தனியாக வாழ முற்பட்டுள்ளனர். இதன் காரணமாக சிறிய அளவிலான அடுக்குமாடி மனைகளை கட்டுவதற்கு நிர்மாண நிறுவனங்கள் திட்டமிடுகின்றன. ஒரு புறம் இளையவர்கள் மறுபுறம் வயதானவர்கள். இவ்விரு பிரிவினரும் தனிமையாக வாழ்வதனால் அதிகமான அடுக்கு மனைகள் தேவைப்படுகின்றது. 2011 இல் வன்கூவரில் 14.5% ஆனவர்கள் தனியாக வாழ்கின்றனர். ரொறொன்ரோவில் 27.4% ஆனவர்கள் தனியாக வாழ்கின்றனர். இவை முந்திய எண்ணிக்கையை விட அதிகமானதாகும்.

2011ஆம் ஆண்டு குடிசனமதிப்பீட்டு தகவல்கள், மனை கட்டுபவர்கள் சிந்தனைக்கு மேலும் உரம் இட்டு வளர்ப்பது போலத்தான் தோன்றுகின்றது. நிலத்தின் அதீத விலை அதிகரிப்பு, நிர்மாணப் பொருட்களின் விலை அதிகரிப்பு, நகரத்திற்குரிய (City/Town) வீடுகட்டுவதற்கான உத்தரவுப்பத்திரம் (Building Permit) பெறுவதற்குரிய பண அதிகரிப்பு, தொழில்சார் அனுபவமிக்க வேலை ஆட்களின் தட்டுப்பாடு... இவை போன்ற மூலகாரணிகளால் புதிய மனைகளின் விலையைக் கட்டுபாட்டிற்குள் வைத்திருக்க



அளவில் சிறிய மனைகளே எதிர்காலத்தில் கட்டப்படும் என்பதனை இலகுவாக ஊகிக்கலாம். இந்நிலைமையே தொடரும் என்பதில் இருவேறு கருத்துகள் இருக்காது. யூன், யூலை, ஆகஸ்ட் 2012 இல் அடுக்குமாடி மனைகளின் விற்பனையில் ஏற்பட்ட வியாபார மந்தநிலை எவ்வளவு காலம் தொடரும் என்பது உடனடியாக ஊகிக்க முடியாது. நீண்டகாலம் அடுக்குமாடி மனை நிர்மாணத்தில் உள்ள நிறுவனங்கள் புதிய கட்டிடத்தொகுதியை இவ்வருடத்தில் சந்தைக்கு கொண்டுவரும் என எதிர்பார்க்க முடியாது. ஏற்கெனவே விற்கத்தொடங்கிய கட்டிடத்தொகுதியில் உள்ள மனைகளை மலிந்த விலையில் வாங்குவதற்குரிய சந்தர்ப்பமாக இதனைக் கொள்ளலாம். பொதுவாக நியாயமான விரும்பிக்கொடுக்கும் விலைகள் (Offer Price)

## நாமும் நமது இல்லமும்

**ராஜா மகேந்திரன்**

## தொடர் - 375

அனேகமான நிர்மாண நிறுவனங்களால் தட்டிக்கழிக்கப்பட மாட்டாது என்பதனை நினைவில் கொள்ளலாம்.

### *DEVELOPMENT CHARGE* ஐ அதிகரிக்கும் பீல் *(PEEL)* பெரும்பாகம்

புதிய வீடுகள், மனைகள், கட்டிடங்கள் கட்டும்போது குறிப்பிட்ட பகுதியில் உள்ள நகரசபை, உள்ளூராட்சி சபை போன்றவற்றிற்கு நிர்மாணம் செய்வதற்கான உத்தரவுப்பத்திரம் பெறும்போது (Development Charge for Permit) அதற்குரிய செலவுப்பணம் செலுத்த வேண்டும்.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்


HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

Raja Mahendran, P.Eng.

Broker / Owner



5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969 & Traders Blvd #29, Mississauga - Tel.:905.712.2666

**CONDO. FOR. SALE KENNEDY & HWY 401**



1+ Den condo. 1 Parking. Close to HWY 401, mall. Asking Price $269,900

**CONDO FOR SALE NEILSON & MCLEVIN**



1 Bedroom. 1 Washroom. 1 parking. Close to Malvern mall. Price $129,900

**BUSINESS SPACE FOR LEASE ON MAIN FLOOR**



2000 sq.ft. 480sq.ft. Zoning for retail or professional office.

**HOUSE FOR SALE HWY 10 & STEELES**



3 Bedroom freehold town house. Possible bsmt apartment. Possible 2nd income. Price $349,900

**CONDO FOR SALE SALE DONMILLS & EGLINTON**



2 Bedroom condo. 1 Washroom. Close to science center. Price $139,900

**HOUSE FOR SALE 14TH & BOX GROVE - MARKHAM**



3 Bedroom house. Sep. entrance possible. 5 Years new. 1760 Sq.ft. Hardwood floor.

# வாகன காப்புறுதியில் 'பொறுப்பு' பிரிவின் நட்டஈடு எல்லை?

## கனடிய தகவல் தொடர் 181

***LEGAL LIMIT TO AUTO INSURANCE LIABILITY COVERAGE***

அந்த பாரிய விபத்தில் அந்த வாகன சாரதியில் முழுமையான தப்பு (100% at fault) என கருத்தில் எடுப்போம். தப்பு இல்லை என நிரூபித்து, விபத்துகள், புலனாய்வு சட்டங்களிலிருந்து (Accident Fault Determination rules & regulation) அவரால் தப்பிக்கவே வழியில்லை. விபத்தில் நிரபராதியாகவிருக்கும் மறுபகுதி சாரதிக்கு, மற்றும் சேர்ந்து போனவர்களுக்கு பயங்கர உடல் காயங்கள். துர் அதிஷ்டமான ஒரு 'எதிர்பாராத சம்பவதில் குற்றவாளியாக நிற்பவரின் தலையில் விபத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்குரிய பொறுப்பு சுமத்தப்படு கின்றது. அந்த சுமையின் பாரத்தினை இறக்குவதற்காகவே வாகன காப்புறுதியில், 'பொறுப்பு பிரிவு' (Liability) என்னும் அம்சம் முக்கியமாக சேர்க்கப்பட்டுள்ளது.

தெரியாத்தனமாக நடந்த இந்த விபத்தில் வாகன காப்புறுதி கம்பனி குற்றவாளியாக நிற்பவரை பின்வரும் வழிகளில் பாதுகாக்கின்றது.

1. ஏனையோருக்கு ஏற்பட்ட உடல் காயங்கள் உயிர் இழப்புகளுக்கு ஒரு வரையறை வரை நட்டஈடாக பணம் வழங்கி அவர்களை சமாதானப்படுத்துகின்றது. (Compensate ot Bodily Injuries & Death of Others)

2. பாதிப்புக்குள்ளான இன்னொருவரின் வாகனத்திற்கும், மற்றும் உடமைகளுக்கும் நட்டஈடு வழங்கி, ஏதோ ஒரு வழியில் தங்களுக்காக கைகொடுக்கின்றது. (damage to the Property of others)

3. விபத்தில் தங்களில் நிஜமாகவே தப்பு உள்ளதா? அல்லது இல்லையா? என்பதனை அறிந்து தங்களை பாதுகாக்க மேற்கொள்ளும் புலனாய்வு செலவுகளையும் இப்பிரிவிலிருந்து வழங்கப்படுகின்றது. (Cost of Investigations & Negotiations Costs)



4. விபத்தில் தங்களுக்கு எதிராக நட்டஈடு கோரி ஏனையோர் தாக்கல் செய்யும் வழக்குகளில் தங்களை பாதுகாப்பதற்கான சகல சட்டரீதியான செலவுகள், வழக்கு களின் செலவுகள் யாவும் இப்பிரிவிலிருந்தே வழங்கப்படுகின்றது. (Defense Cost for any Civil Action)

5. பாதிக்கப்பட்டவர் தாம் மேற்கொண்ட உடமை மருத்துவ செலவுகளை அறவிட முயலும் போது அதற்குரிய பணமும் இங்கிருந்தே வழங்கப்படுகின்றது. (Reimbursement of Immediate Medical Aid Costs)

6. சில நேரங்களில் விபத்தில் தப்பு தங்கள் பக்கம் இருப்பதால் இதில் நியாயம் பெற இன்னொருவர் செலவழித்த பணத்தினை சட்டரீதியாக தங்களிடம் அறவிட முயற்சிக்கலாம். இப்படியொரு நிலைமை ஏற்பட்டாலும் தங்களுக்காக காப்புறுதி கம்பனி இப்பிரிவிலிருந்தே பணம் கொடுத்து பாதுகாக்கின்றது. (All Legal Costs Court Assess Against Insured)

7. நட்டஈடாக வழங்க வேண்டிய பணத் தொகை தாமதம் ஆகும் போது அதற்குரிய வட்டியும் இப்பிரிவிலிருந்தே வழங்கப்படு கின்றது. (Payment of the Interest on the Insured Portion of Judgment for damages Against Insured)

மேற்குறிப்பிட்ட வழிகளில் பாதுகாப்பினை வழங்கும் இப் 'பொறுப்பு காப்புறுதி பிரிவு' (Liability Section) குறைந்தது $200,000 டொலர் தொகையிலேனும் வாகன காப்புறுதி ஒப்பந்தத்தில் இருக்க வேண்டும் என்பது சட்டத்தின் நிபந்தனையாகும். அதாவது $200,000 அதற்கு மேலால் தொகையினை அதிகரிக்கும் போது மாத கட்டுப்பணமும் அதிகரிக்கும். மாத கட்டுப்பணத்தினை குறைப்பதற்காக பலரும் இந்த வரையறை யினை இரண்டு இலட்சத்திற்கு மேல் உயர்த்திக் கொள்ள விரும்புவதில்லை. (சில கம்பனிகள் இந்த எல்லைக்கு மேலால் மில்லியன் டொலர் வரை வரையறை இருக்க வேண்டும் என நிபந்தனைகள் விதிப்பதுண்டு)

ஆனால் இங்கு இக்குறிப்பிட்ட ஒப்பந்த மாதாமாதம் ஏற்படும் செலவினை பாராது அதிக தொகையில் செய்து வைத்திராமல் இருந்து பாரிய விபத்துகளில் தப்புக்குரியவ ரான நிலைமைக்கு தள்ளப்படும் போதே உச்சம் தலையில் பாறாங் கல்லு விழுந்த மாதிரி பிரச்சினை ஆரம்பிக்கின்றது. ஏனெனில் பாதிக்கப்பட்டவர் பல மில்லியன் டொலருக்கு மேலதிக நட்டஈடு கோரி விபத்தில் குற்றவாளியாக நிற்பவர் மீது வழக்கு தொடர்ந்த ஆணை (Court Summon) வீடு தேடி வரலாம்.

தம்மை நோக்கி வந்த இந்நீதிமன்ற ஆணையினை முதலில் அவரது காப்புறுதி கம்பனியே கையாள்வதால் அவர்களின் கவனத்திற்கே இதனை முதலில் எடுத்து செல்ல வேண்டும். இங்கு வழக்கு தொடர்பவர் நிஜமான பாதிப்புகளுக்கு உள்ளவராகவும் இருக்கலாம். காப்புறுதி கம்பனியின் பணத்தினை கறக்கலாம் என்ற கற்பனையில் சாதாரண உடல் பாதிப்புகளுக்கு உட்பட்டவரும் வழக்கு தொடரலாம். இந்த மாதிரியான விடயங்களில் இருப்பவர்களை பயன்படுத்தி வர்த்தகம் செய்யும் சட்ட உதவியாளர்களும் இயங்கலாம். எப்படியிருந்தாலும் இங்கு தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாதகமான முடிவு என்பது பின்வரும் நிலையில் இருந்தால் மட்டுமே கைகூடும் அதாவது.

- உடல் காயம் என்பது நிரந்தரமாக வாழ்வினை பாதிக்கும் நிலைமையில் மிக கடுமையானது என்பது மருத்துவ அத்தாட்சியில் நிரூபிக்கப்படல் வேண்டும். (CATASTROPHIC IMPAIRMENT)
- பாதிக்கப்பட்டு வழக்கு தொடர்ந்தவரில் விபத்தின் போது தப்பு என்பது முழுமையாக இல்லாது இருத்தல் வேண்டும். (AT NO FAULT)

மேற்குறிப்பிட்ட இரு நிலைமையில் இருப்பது நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்திலேயே பெருமளவு தொகை நட்டஈடு பெறுதல் என்பது சாத்தியப்படும். கனடாவில் வாகனவிபத்துக்களில் நட்டஈடு பெறும் நீதித்துறை வரலாற்றில் இவை சாதக-மாகவும் அமைந்திருந்து பல இடங்களில் நிராகரிக்கப்பட்டதும் உண்டு. சரி! இங்கு பாதிக்கப்பட்டவரின் நிலைமை நிருபணமாகி பெரும் தொகையினை மேலதிக நட்டஈடாக விபத்தில் குற்றவாளியாக நிற்பவர் வழங்கியே தீர வேண்டும்.

ஆனால் காப்புறுதி கம்பனி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தொகை வரையே கைகொடுக்கும். அதற்கு மேலால் உள்ள சகல தொகையும் குற்றவாளியாக நிற்பவர் தமது சொந்த பணத்திலேயே செலுத்த வேண்டும்.

('ABSOLUTELY LIABILITY LAW' என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் ஒரு சட்டபிரிவு இங்கு



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** *(Sales Rep.)*
**HomeLife/GTA Realty Inc.**
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

Brand New homes from builder detached 1900 sqft. double garage Price $285,000 London ON HWY 401 & University of Weston *10% Appreciation in 2 years expected


**Daisy Mart**
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

**LAND VALUE**
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

**GAS STATION**
North of Barrie with property. Good income. Store + Apartment


Sell your home
faster
and more money
Harmony/ Taunton
$355,000
4 Bedrooms, 3 W Rooms
Ceramic,Hardwood Floor
Markham Ellesmere
$358,888
3+1 Bedrooms, 2 W Room
Hardwood Floor
Meadowvale & Sheppard
$385,000
3 Bedrooms, 3 W Rooms
Ceramic Floor
W.Mccowan / N.Denison
$399,900
4+2 Bedrooms, 4 W Rooms
Ceramic Floor
Morningside
$429,900
3 Bedrooms, 2 W Rooms
Ceramic Floor
9th Line/Reeves Way
$459,900
3 Bedrooms, 3 W Rooms
Hardwood ,Ceramic Floor
Mccowan/Major Mac
$479,000
4+1Bedrooms, 3 W Rooms
Hardwood Ceramic Floor
Morningside & Finch
$519,000
4 Bedrooms, 3 W Rooms
Hardwood, Ceramic Floors
Reeves Way Blvd/Hoover Pk Dr.
$519,000
3+1 Bedrooms, 3 W Rooms
Ceramic Floor
E.9th Line/N.16th
$519,900
3 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor
Mccowan & Highglen
$528,000
3+1 Bedrooms, 4 W Rooms
Ceramic Floors
Box Grove Bypass/ 14th Ave
$649,000
4 Bedrooms, 3W Rooms
Hardwood, Ceramic Floor
Hoover Park & Sandiford
$669,900
4 Bedrooms,3 W Rooms
Hardwood, Ceramic Floor
Major Mac/Mccowan
$699,000
4+1 Bedrooms, 3 W Rooms
Ceramic Floor
9th Line/Rouge Bank Dr
$976,800
4 Bedrooms, 4 W Rooms
Hardwood, Ceramic Floor
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent
Your home sold in 30 days or we buy it
RE/MAX
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@yahoo.com
KZG 647-200-5833
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770
I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# *GTA Square* இல் வெற்றிகரமாக நடைபெற்றுவரும் *Hero Catering* உணவகத்தின் ஆதரவில் வெளிவரும் கணிதம் சம்பந்தமான போட்டி

## செயல்முறை

01. கிடையான (Horizontal), நிலையான (Vertical) பெட்டிகள் ஒவ்வொன்றும் (1 - 4) வரையான இலக்கங்களால் நிரப்பப்படல் வேண்டும். ஒரு எண் ஒரு தடவை மட்டுமே பாவிக்கவேண்டும்.

02. தடிப்பான கறுப்பான கோடுகளாலான பெட்டிக்குள் இடதுபக்க மேல் மூலையில் காட்டப்படும் எண் மற்றும் செயல்பாடு (கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல்) எந்த ஒழுங்கிலாவது கணக்கிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் உள்ள இலக்கம் பெறப்படல் வேண்டும்.

03. தனியானபெட்டியில் வரவேண்டிய இலக்கம் தரப்பட்டுள்ளது.

**விடைகள் விளம்பர பப்ளிகேஷன்ஸ் இற்கு *October 25* இற்கு முன்பாக தொலைநகல் *(Fax)*, அஞ்சல் *(Mail)* மின்னஞ்சல் *(E-mail)*** மூலம் **அனுப்பி வைக்க வேண்டும்.**

**சரியான விடையை எமக்கு அனுப்பியவர்களுள் ஒரு அதிஷ்ட சாலிக்கு $10 பெறுமதியான *Voucher* வழங்கப்படும். இந்த *Voucher* ஐ *Hero Catering* உணவகத்தில் பாவிக்கலாம். இதற்கு காசு பெறுமதி கிடையாது.**
(* Some conditions may apply)

• **போட்டி சம்பந்தமான விளக்கங்களுக்கு *(Any questions)*** 416.282.8059 **இல் தொடர்புகொள்ளவும்**

### போட்டி இலக்கம் - 2

| | | | |
|---|---|---|---|
| 6x | 3 | 3- | |
| | | 2÷ | |
| 2÷ | | 8+ | 1 |
| 3- | | | |

**போட்டி இல. 1 இல் வெற்றி பெற்றவர்** S. நிரஞ்சன் - மார்க்கம்

### விடை- போட்டி இலக்கம் _1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2- 3 | 1 | 1- 5 | 4 | 3÷ 6 | 2 |
| 3- 2 | 12x 4 | 3 | 5 5 | 5- 1 | 6 |
| 5 | 36x 3 | 2 | 6 | 4 4 | 3÷ 1 |
| 17+ 6 | 5 | 4 4 | 3+ 1 | 1- 2 | 3 |
| 4 4 | 6 | 5- 1 | 2 | 3 | 1- 5 |
| 3+ 1 | 2 | 6 | 2- 3 | 5 | 4 |

***Instructions***

1. Each row and each column must contain the numbers1 through 4 without repeating.
2. The numbers within the heavily outlined boxes, called cages, must combine using the given operation (in any order) to produce the target numbers in the top-left corners.
3. The number in the single-box cage is given.

**முன்னாள் பிரதமர் இந்திர காந்தி**

இந்திரா காந்தி காரில் செல்லும்போது அவர் கையில் எப்பொழுதும் பென்சிலும் அச்சடித்த காகிதமும் இருக்குமாம். அக் காகிதத்தில் இருக்கும் குறுக்கெழுத்து போட்டி (crossword) வெற்றிடங்களை பென்சிலால் நிரப்புவதுதான் இவரின் பொழுதுபோக்கு.

Crossword, pussle, Suduko, விளம்பரத்தின் கணிதப்போட்டி நாங்களும் முயற்சிக்கலாமே.

# வாகன காப்புறுதியில்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

பாதிக்கப்பட்டவரை பாதுகாக்கின்றது. இச்சட்டப்படி நீதிமன்ற தீர்ப்பினை மதித்து பாதிக்கப்பட்டவருக்கு உரிய தொகையினை வாடிக்கையாளர் சார்ப்பில் கம்பனி வழங்கும். அதன் பின்னர் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தொகைக்கு மேலால் வழங்கப்பட்ட தொகையினை தமது வாடிக்கையாளரை துரத்தி அறவிடமுயலும்.)

பணத்தினை செலுத்த தவறினால் சட்டம் என்பது திடீரென இவரது உடமைகள் வீடுகள், சொத்துகளில் கை வைக்கும். தப்பி கொள்வது என்பது சிரமமானதாகவே இருக்கும்.

சரி! **இப்படியான பிரச்சினைகளின் முன் எச்சரிக்கையான தீர்வு என்ன? இப்பொறுப்பு காப்புறுதியின் தொகையினை மாதகட்டுப்பணம் அதிகமாக இருந்தாலும் மில்லியன் டொலர்களில் வைத்திருப்பதேயாகும்.**

கனடாவின் நீதித்துறை வரலாறுகளில் பகிரங்கப்படுத்தப்பட்ட சம்பவங்களிலிருந்து (Legal History) நான் தேடி படித்து அறிந்து கொண்டே நீதிமன்ற தீர்ப்புகள் இரண்டினை இங்கு உதாரணமாக எச்சரிக்கைகளுக்காக குறிப்பிடுகின்றேன்.

**ஹோர்டன்**
**மொரிசோன் எதிர் ஹிறிக்**
(GORDON & MORRISON VS GREIGE)

என்ற வாகன விபத்து வழக்கில் மொத்தமாக 24 மில்லியன் டொலர் தொகை பாதிக்கப்பட்ட இருவருக்கும் பகிர்ந்து வழங்க வேண்டும் என ஒன்ராரியோ நீதிமன்றம் 2007 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியிருந்தது.



அதாவது 2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஒன்ராரியோ, பிராட்வோர்ட் (Bradford) நகரில் திரு. டிரக் ஹோர்டன் (Mr. Derek Gordon) திரு. றியன் மொரிசொன் (Mr. Ryan Morrison) என்னும் இருபது வயது இளைஞர்கள் திரு. ஹோரி ஹறிக் (Mr. Corey Greig) என்பவரது பொதி ஏற்றும் வாகனத்தில் (Pick up Truck) பிரயாணிகளாக சேர்ந்து சென்ற போது அதிவேக திகில் ஓட்டத்தில் வாகனம் மோதி பிரண்டு (Single Accident) விபத்துக்குள்ளாகியது.

சேர்ந்து போன இருவரில் ஒருவர் முள்ளந்தண்டு நரம்பு பாதிக்கப்பட்ட நிலையில் சக்கர நாற்காலியின் துணையுடன் (Spinal Cord Injury, Which left him a poraplegic) வாழ வேண்டிய நிலைமை மற்றவருக்கு மூளையின் செயல்பாடு என்பது நிரந்தரமாகவே பாதிக்கப்பட்ட நிலைமை. (Catastrophic brain injury, which left him without bladder & bowl control, sense of smell taste, hunger, temperature and sexual function)

**மார்கோக்ஷியா எதிர் ஜில்**
(Marcoccia Vs Gill)
என்ற வழக்கின் வாகன விபத்து ரொறொன்ரோவில் ரெக்ஸ்டேல் & ஹம்பர் வூட் புல்வோட் (Rexdale & Humberwood Blvd) சந்திப்பில் 2000ஆம் ஆண்டு யூன் மாதம் நடந்தும் இதில் பாதிக்கப்பட்ட இளைஞனுக்கு $16.9 மில்லியன் டொலர் நட்டஈடு வழங்க வேண்டும் என ஒன்ராரியோ நீதிமன்றம் 2009 இல் தீர்ப்பு வழங்கியது.

ஒரு சீக்கியரினால் செலுத்தப்பட்ட தளபாடரக் வண்டி றொபேட் மார்க்கோக்ஷியா என்ற இளைஞன் செலுத்தி வந்த சிறு கார் ஒன்றுடன் மோதியதில் அந்த இளைஞன் நிரந்தர உடல் பாதிப்பு என்ற துன்பத்தினை உருவாக்கியதால் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட இரு வழக்குகளின் தீர்ப்புகள் உதாரணத்திற்காக குறிப்பிட்டுள்ளேன். இதேபோல் ஏராளமான சம்பவங்களை குறிப்பிடலாம். மற்றையோரின் அனுபவங்கள் என்பது யாவருக்கும் எச்சரிக்கும் படிப்பினைகள்?


Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



**நந்தா ஐயாத்துரை**

***Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555***

# Scarborough Housing Help Centre

Scarborough Housing Help Centre

## SHHC's Settlement Program

Now Offering

Citizenship Test Preparation Classes

### Topics to Include:

- *Rights and Responsibilities of Citizenship*
- *Canada's History, Economy and Geography*
- *The Political System (Government, Election)*
- *Canadian Culture and Customs*

(Sessions will help prepare clients for written and interview tests)

Classes: Fridays, October 5th, 12th, 19th and 26th

Time: 1:00 pm - 3:00 pm

Venue: 205 – 2500 Lawrence Avenue East

(West of Midland – one block east of Lawrence RT station)

**To register, please contact**

**Tel: 416.285.8070 ext 310**

Citizenship and Immigration Canada Citoyenneté et Immigration Canada

Canada

# Universal Community Help

## *1. EXPRESS METRO HOUSING*

வருமானம் குறைந்தவர்களுக்கும், Shelter இல் வசிப்பவர்களுக்கும், முதியவர்கள், தனியே வாழ்பவர்கள், தனிப்பெற்றோர் புதிய குடிவரவாளர்கள் அனைவருக்கும் கூடிய விரைவில் 4 கிழமை தொடக்கம் 3 மாதங்களில் Subsidized House பெற்றுத்தருவோம்.

## *2. WALKER OR WHEEL CHAIR OR SCOOTE*

இதனுடன் Washroom உட்பட 15,000 டொலர் பெறுமதியான பொருட்களை குறைந்தது 3 மாதத்தில் பெற்றுத்தருவோம். WALFARE OR O.D.S POR WSIB OR PENSION இருப்பவர்கள் உடனே விண்ணப்பிக்கவும். அரச அனுமதி பெற்ற Occupational Therapist ஒருவர் எம்முடன் இணைந்து கடமையாற்றுகிறார். June 7, 8, 16, 18, 23, 25 ஆகிய திகதிகளில் விசேட நேர்முகத் தேர்வுகள் உண்டு.

## *3. FOOT CARE CLINIC*

கால்களில் பல்வேறு காரணங்களால் பாதணிகள் பாவிக்க முடியாமல் இருப்பவர்களுக்கு Free Medicated Shoes 3 மாதங்களில் பெற்றுத் தருவோம்.

4. இலங்கை, இந்தியத் தூதரகங்கள் ஊடாக உங்களுக்குத் தேவையான கடவுச்சீட்டு, அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, விவாக மரண விவாகரத்துப் பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

5. கனடியக் குடிவரவு சட்டப்படி Sponcer செய்து தாமதமாக இருப்பவர்களுக்கு துரிதப்படுத்தி வரவசதி செய்து கொடுக்கப்படும். இலங்கை இந்திய பாகிஸ்தானியர்களும் தொடர்பு கொள்ளலாம்.

6. Separation ஆக இருப்பவர்கள் அனைவர்க்கும் Quick Divorce Certificate வசதி செய்து தரப்படும். இருவரும் தனித்தனி அல்லது இருவரும் முன் கூட்டியே அனுமதி பெற்று வரவும்.

7. எமது பயிற்சி பெற்ற வைத்தியர்கள் மூலம் Special Diet Allowance Form அத்தாட்சிப்படுத்திக் கொடுக்கப்படும்.

8. நீண்டகாலமாக Tax Return பெற்றுக் கொள்ளாமல் தவறவிட்டவர்கள் Special Re Tax Return Service மூலம் Revenue Canada பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும்.

## *9. தானம் - தர்மம் - தொண்டு*

புதிய குடிவரவாளர்களே ***Vegetarian Food Bank or U.C.H or Thiruchchenchdoor Murugan Temple*** தொண்டர்களுடன் இணைந்து கொள்வதன் மூலம் அரச உதவியாக 6 மாதப் பணமாக 600 டொலரையும் முதல் மாதம் மேலதிகமாக 250 டொலரையும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள சகல சேவைகளுக்கும் ஆகக் குறைந்த அலுவலகக் கட்டணம் அறவிடப்படும்.

***10. Food handling certification certified food handle training.***

***11. UCH Legal Clinic***

**தொடர்புகளுக்கு: *416.744.3011***

***Office Hours -*** 11.00 Am to 4.00 Pm
***Monday to Sunday -*** 416.744.4357
12.00pm to 10.00 pm
***Monday to Sunday -*** 416.554.5040
9.00 am to 9.00 pm
***Special hot line***

***Unite - B - 5***
***2370 Midland ave***
***Midland & Sheppard***
***M1S 5C6***

***Unit - E***
***3005 Isilington Ave.***
***Steel & Isilingtion***
***M9L 2K9***

# ஒட்டு மொத்தமான சுயநலவாதிகள்

## ஓடும் நீர் உறைவதில்லை 151

சுயநலம் என்பதற்குப் பலவிதமான விளக்கங்கள் கொடுக்கப்படுவதை நாம் அறிந்துள்ளோம். நான், எனது என்னும் அடிப்படையில் ஒருவர் செயற்படும் போது அவரை சுயநலவாதி என்கிறோம். ஒரு செயலை இருவர் செய்யும்போது அதன் சாதகமான விளைவுகளில் அதிகபங்குக்கு ஒருவர் உரிமை கொள்ளும்போது அதுவும் சுயநலத்தின் வெளிப்பாடு என்கிறோம். அதாவது சமமான உழைப்பு, பங்களிப்புக்கள் இருந்தும் ஒருவர் அதன் விளைவுகளின் சாதகமான பகுதியில் மற்றவர்களை விடத் தமக்கு அதிகம் எடுத்துக் கொள்வது சுயநலத்தின் வெளிப்பாடு என்கிறோம். ஒரு செயலைப் புரியும் ஒருவர் பொதுநலம் என்ற போர்வைக்குள் தனது நலனை மட்டும் மையமாகக் கொண்டு மறைமுகமாகச் செயற்படுவதும் சுயநலன் என்பதன் வெளிப்பாடாக அமைவதையும் நாம் காண்கிறோம். இவ்வாறாக ஒருவர் தனது செயற்பாடுகளின் சாதகமான விளைவுகளில், குறிப்பாக அவற்றின் நலன்களில் ஒப்பீட்டு ரீதியில் மற்றவர்களைவிடத் தமது பங்கு அதிகமாகப் பெறமுயற்சிப்பது அல்லது பெற்றுக்கொள்வது சுயநலத்தின் வெளிப்பாடு எனப் பொருள் கொள்ளப்படுவதுண்டு. இங்கு ஒருவரது செயற்பாடு சுயநலம் சார்ந்ததாகக் கணிக்கப்படுவதற்கு அவரது செயற்பாடுகள்

**KG Master-kgmaster@rogers.com**
**www.kgmaster.com**

மற்றவர்களுடன் தொடர்புபடுத்தப்பட்டிருப்பதும் அடிப்படையாகின்றது. அதாவது ஒருவரது செயற்பாடு மற்றவர்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு அதன் சாதகமான பெறுபேறுகளின் பெரும் பகுதியைப் பொருத்தமற்ற முறையில் தனதாக்கிக் கொள்ளும் மன இயல்பு சுயநலன் என்றும் விளக்கப்படுத்தப்படுவதுண்டு. இவ்வாறு சுயநலம், சுயநலவாதம் என்பதற்குப் பல்வேறு வகையான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. எனினும் இந்தச் சுயநலவாதம் நமது மனதில் ஒருதவறான பார்வைக்கு மட்டும் வித்திட்டிருப்பது தான் தவிர்க்கப்பட வேண்டியது. அதாவது சுயநலம் என்பதன் இருபக்கத்தையும் பார்ப்பதைத் தவிர்த்து அதன் ஒரு பக்கத்தை மட்டுமே அதுவும் அதன் பாதகமான பக்கத்தை மட்டுமே நாம் கருத்திற் கொள்பவர்களாக வாழ்கின்றோம். இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

> அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
>
> - நன்றியுடன் KG Master

நாம் ஒவ்வொருவரும் வாழ்வியலின் மிக முக்கியமான விடயம் ஒன்றைப் புரிந்து கொள்வது அவசியமாகின்றது. அதாவது நாம் நாளாந்தம் எதிர்கொள்ளும் அத்தனை வாழ்வியல் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு என்பது தான். ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல் இவற்றுக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒரு நாணயத்தின் ஒருபக்கம் அழிக்கப்பட்டதும் அந்த நாணயம் அதன் பெறுமதியை இழப்பது போல் இவற்றுக்கும் ஒருபக்கம் அகற்றப்பட்டால் அல்லது புறக்கணிக்கப்பட்டால் அவற்றின் உண்மையான தன்மை மறைக்கப்பட்டுவிடும். இதனால் தான் ஒவ்வொரு வாழ்வியல் நிகழ்வுக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இங்கே இரண்டு பக்கங்கள் எனக்குறிப்பிடும்போது ஒன்றுக்கொன்று எதிரானவை எனப்பொருள் கொள்ளப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். அதாவது ஒரு விடயத்தின் இருவகைப்பட்ட இயல்புகள் அல்லது தன்மைகள் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். ஏனெனில் ஒன்றுக்கொன்று முரணானது என்பதும் ஒன்றின் இருவேறுபட்ட இயல்புகள் என்பதும் முற்றிலும் வேறுபட்டவையாகும். உதாரணமாக இன்பம்-துன்பம், மகிழ்ச்சி-கவலை, புகழ்ச்சி-இகழ்ச்சி, விருப்பு-வெறுப்பு, சாந்தம்-கோபம், பகல்-இரவு, நன்மை-தீமை என்பன ஒன்றிற்கொன்று முற்றிலும் முரணானவை. ஆனால் ஒன்றின் இருபக்க இயல்பு என்பது அதன் அடிப்படைத் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்தாத இருவிடயங்களாகும். உதாரணமாக அன்பு என்பது சுயநலன் சார்ந்த அன்பாகவும் பொதுநலன் சார்ந்த அன்பாகவும் காதல் என்பது காருண்யம் சார்ந்ததாகவும், காமம் சார்ந்ததாகவும் விருப்பம் என்பது சுயவிருப்பம் சார்ந்ததாகவும், பிறர்விருப்பம் சார்ந்தாகவும், அமைவதைக் குறிப்பிடலாம். இங்கு அன்பு, காதல், விருப்பு என்பன அவற்றின் அடிப்படையில் மாற்றம் அடையாமல் அதாவது முரண்படாமல் அவற்றின் இருவகைப்பட்ட தன்மைகளைக் கொண்டிருப்பதை அவதானித்தல் வேண்டும்.



துர்அதிர்ஷ்டவசமாக இந்த சாதாரண பகுப்பாய்து முறையை நாம் உணர்வதில்லை. சிறுவயது முதல் ஒன்றையும் அதன் முரண்பாட்டையும் பற்றியே நமது ஆசிரியர்களும் பெற்றோர்களும் நமக்குத் தெரியப்படுத்தியுள்ளார்களேயன்றி அந்த ஒவ்வொன்றினதும் இரு இயல்புகள் பற்றிப் போதிக்கப்படுவதில்லை. ஏனெனில் இந்த வகையான விளக்கங்கள் வாழ்வியல் அனுபவங்களின் வெளியீடேயன்றி அறிவியல் சார்ந்தவையல்ல. இதனால் தான் வாழ்க்கைக் கல்வி என்பது ஏட்டுக்கல்வியினால் எட்டிப் பிடிப்பதற்குக்கூட முடியாத தூரத்தில் இருப்பதும், வாழ்க்கைக்கல்விமான்கள் என்பவர்கள் வாழ்வியல் அனுபவத்தின் முன்னோடிகள், வழி காட்டிகள் எனப்படுபவர்களுமாவர். வாழ்க்கைக் கல்வியானது ஏட்டுக் கல்வியைப் போல் முன்கூட்டியே வடிவமைக்கப்பட்ட விதிமுறைகளை, அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட விடயங்களை கொண்டிராமல், ஒவ்வொருவரும் தாமாகவே ஆரம்பிக்கின்ற, முன்னெடுத்துச் செல்கின்ற, அதன் மூலமான எந்தப் பெறுபேறுகளுக்கும் ஒட்டு மொத்தமான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய கல்விமுறையாக அமைந்து விடுகிறது. அதுமட்டு மன்றி இந்த வாழ்க்கைக் கல்வியில் ஒவ்வொருவரும் எந்த அளவிற்குச் சித்திபெற்றுள்ளார்கள் என்பதும் அவரவரால் மதிப்பிடப்படுவதேயன்றி மற்றவர்களால் அல்ல என்பதும் முக்கியமானதே.

ஒரு விடயத்தின் இரண்டு இயல்புகள் பற்றிய அறிவு என்பது மிகவும் இலகுவாகக் கடைப்பிடிக்கக் கூடியது என்பதும் இந்த அறிவின் மூலம் சிறப்பான புரிந்துணர்வுடன் கூடிய வாழ்வியல் முறையை முன்னெடுத்துச் செல்வது சுலபமானது என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே. ஏனெனில் கணவன், மனைவி நட்பு முறையாக இருந்தாலும் சரி, பெற்றோர் குழந்தைகள் என்ற உறவுமுறைகளாக இருந்தாலும் சரி, முதலாளி, தொழிலாளி என்ற தொழில் இணைப்பு முறையாக இருந்தாலும் சரி ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் அடித்தளமாக அமைகின்ற இந்த இருவகையான இயல்புகளை நடுநிலையில் நின்று மதிப்பீடு செய்வோமாயின் அது சம்பந்தமான நமது தீர்மானங்கள் மனநிறைவைத் தரும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இங்கு, இந்தக்கட்டுரையில் சுயநலன் என்பது இருவகை இயல்புகளை விளக்குவதும் இந்த இருவகை இயல்புகளையும் முற்றுமுழுதாகப் பயன்படுத்துபவர்கள் யார் என்பதைத் தெரியப்படுத்துவதுமே எனது நோக்கமாகும். அதாவது சுயநலத்தின் இருவகை இயல்புகளையும் மட்டுமே பயன்படுத்தும் ஒட்டு மொத்தமான சுயநலவாதிகள் யார் என்பதை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதே எனது நோக்கமாகும்.

உலகம் ஒரு நாடகமேடை என்பதும், நாம் எல்லோரும் நடிகர்கள் என்பதும், நடிகர்களாகிய நாம் ஒவ்வொருவரும் பிறப்பில் இருந்து இறப்பு வரை பல்வேறுவகையான கதாபாத்திரங்களைப் பொறுப்பேற்று நடித்துக் கொண்டிருக்கிறோம் என்பதும் ஒரு விசித்திரமான உண்மையாகும். குழந்தை என்ற கதாபாத்திரத்தில் ஆரம்பிக்கும் நாம் உறவு, நட்பு, தொழில், சமூகப்பங்களிப்பு எனப்பல்வேறு கருவூலங்களைக் கதைகளாக்கி அதற்கான கதா பாத்திரங்களை பொறுப்பேற்று நடித்துக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறான ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு தலைப் பெயரால் (Title) அடையாளங்காணப்படுகின்றது. குழந்தை, சிறுவன், இளைஞன், வாலிபன், கணவன், தந்தை, பாட்டன், பூட்டன் என்ற குடும்ப உறவுக்குள்ளான தலைப்பெயர்களும், மாணவன், ஆசிரியன், முதலாளி, தொழிலாளி, அரசியல்வாதி, ஆன்மீகவாதி என்ற சமூக இணைப்புடனான தலைப்பெயர்களும் நமது நாடகபாத்திரத்தினை இனங்கண்டுகொள்ள உதவுகின்றன. இவ்வாறான பாத்திரங்கள் ஒவ்வொன்றிலும் நாம், நமது நலனை அதாவது சுயநலனை ஓரளவிற்காவது கருத்திற்கொள்ளாது செயற்பட முடியாது. அதாவது நமது ஒவ்வொரு பாத்திரமும் நமது சுயநலத்தின் கணிசமான பங்கைக் கொண்டிருப்பது இயற்கையானதே. ஆனால் ஒரேயொரு கதாபாத்திரம் மட்டும்

தொடர்ச்சி 29ஆம் பக்கம்


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹராஜியின் உரைகள்**

**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

**On TV**

Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219


# காலத்தோடு வளரும் கணினிகள் - 6

என் அன்புக்குரிய வாசகர்களே!

இன்று கணினி பற்றி அறிய விரும்பும் வாசகர்கள் எல்லோருக்கும் தேவையான சில அடிப்படை விடயங்கள் பற்றி ஆராய்வோம். கணினி ஏற்றுக் கொள்ளும் மிகச் சிறிய தகவலின் அளவினை பிற் (Bit) என்கின்றோம். இது இயக்கம் (ON or 1) அல்லது இன்மை (OFF or 0) என்பதனைக் குறிக்கும். இவ்வாறாக எட்டு பிற்ஸ் சேர்ந்ததை ஒரு பைற் (Byte) என்கின்றோம். இவ்வாறாக எந்த ஒரு தகவலையும் o அல்லது 1 மூலம் மாற்றீடு செய்து கொள்ளப்படும் மொழியே கணினியின் மையச்செயற்பாட்டகம் (Microprocessor) புரிந்து கொள்ளும் மொழியாகும். இவ்வாறான மொழியை கணினியின் இயந்திர மொழி (Machine Language) என்கின்றோம். இதனைக் கணினியின் இரும மொழியெனவும் (Binary language or Digital Language) கூறுவர். எவ்வளவு பெரிய கணித்தல்களையும் சாதுர்யமாகச் செய்துவிடும் கணினிக்கு தெரிந்த மொழி பூச்சியமும், ஒன்றும் மட்டுமே. BASIC போன்ற நிரலாக்கல் மொழியில் (Programming Languages) கட்டளைகள் (instructions) எழுதப்படும் பொழுது சாதாரண ஆங்கிலச் சொற்களில் எழுதுகின்றோம். ஈற்றில் இவை மென்பொருட்களால் கணினியின் இயந்திர மொழிக்கு மொழிபெயர்க்கப்படுகின்றன. கணினியின் இயந்திர மொழிக்கு ஓரளவுக்கு நிகராக உள்ள மொழிகளை Low Level Programming Languages எனக்குறிப்பிடுவோம். இதற்கு உதாரணமாக அசம்பிளர் (Assembler) மொழியைக் குறிப்பிடலாம். இந்த மொழியில் ஒரு சில ஆங்கிலச் சொற்களுடன் அதிகமான 0 அல்லது 1 எண்களால் கட்டளைகள் எழுதப்பட்டிருக்கும். BASIC. FORTRAN, PASCAL, COBOL, C போன்ற நிரலாக்கல் மொழிகளை எல்லாம் High Level Programming Languages என அழைக்கின்றோம்.

கடந்த இதழில் ஒரு கரக்டர் (Character) இனைச் சேமிப்பதற்குத் தேவையான இடத்தின் அலகை பைற் (Bytes) என்று அலகிடுகின்றோம் என்று குறிப்பிட்டிருந்தேன். இருமை எண் முறையில் (Binary System) எந்த ஒரு கரக்டரையும் (எண், எழுத்து அல்லது குறியீடு) 0 அல்லது 1 என்பவற்றை உட்படுத்தி 8 பிற்ஸ் க்குள் எழுதமுடியும். ஒரு மின்னழுத்தத் தட்டில் அல்லது மின்விசைப்பலகையில் (Keyboard) ஒரு எழுத்தை அழுத்தும்போது ஒரு பைற் தகவல் கணினியின் உள்ளே செலுத்தப்படுகின்றது. பிற் என்ற சொல்லுக்கும் பைற் என்ற சொல்லுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை இப்பொழுது விளங்கிக் கொண்டிருப்பீர்கள் என நினைக்கின்றேன். கணினியில் காணப்படும் வெவ்வேறு விதமான நினைவகங்களில் (memory devices) தகவல் சேமிக்கப்படுவதற்குரிய அளவுமுறையை பைற் என்கின்றோம் என்பதை நன்றாக விளங்கிக் கொண்டிருப்பீர்கள். நிறையைக் குறிப்பதற்கு கிராம், கிலோ கிராம் இருப்பதைப் போல பைற்ஸ் இலும் கிலோ பைற்ஸ், மெகா பைற்ஸ், கிகா பைற்ஸ் போன்ற பெரிய அளவீடுகளும் உள்ளன என்பதையும் கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தேன். அண்ணளவாக 1 கிலோ பைற் என்பது 1000 பைற்ஸ்களைக் குறிக்கும். உண்மையில் ஒரு கிலோ பைற்றில் 1024 பைற்ஸ் உள்ளன. ஒரு மெகா பைற்ஸ் இல் சரியாக 1,048,576 பைற்ஸ் இருக்கும் (அண்ணளவாக 1,000,000 பைற்ஸ்) ஒரு கிகா பைற்ஸ் இல் சரியாக 1,073,741,824 (அண்ணளவாக 1,000,000,000) பைற்ஸ் உண்டு. கணினிகளில் பாவிக்கப்படும் எண், எழுத்து மற்றும் குறியீடுகளைச் செயற்படுத்தும் பொதுவான குறியீட்டு முறை ASCII (Ameican Standard Code of Information Interchange) ஆகும். இதில் ஒவ்வொரு எண், எழுத்து மற்றும் குறியீடுகளுக்கு ஒவ்வொரு ASCII Code Numbers கொடுக்கப்பட்டிருக்கும்.

கணினித்துறையில் உள்ளவர்கள் உரையாடும் பொழுது கணினியின் தொடர்பியல் (communication) செயற்பாட்டில் சமாந்தரம் (Parallel), தொடர் (Serial) என இருவிதமான மின்னணுச்சாதனங்கள் பற்றிப் பேசிக்கொள்வதை அவதானித்திருப்பீர்கள். தொடராக இணைக்கப்படும் கம்பிகள் 0 இல்லது 1 இனை மட்டும் எடுத்துச் செல்லும். ஒரே தடவையில் பல தகவல்களை எடுத்துச் செல்வதற்கு சமாந்தர தொடர்பியல் இருக்க வேண்டும். சமாந்தர தொடர்பியல் செயற்பாட்டில் ஒரே நேரத்தில் எட்டு பிற்ஸ் தகவல்கள் எட்டு இணைப்புக் கம்பிகளால் எடுத்துச் செல்லப்படுகின்றன. அன்பான வாசகர்களே! கணினிகளின் வரலாறு மட்டுமன்றி கணினி பற்றிய அறிவை வளர்க்க உதவும் ஒரு கட்டுரைத் தொடராக அமை கின்றதல்லவா. கணினி உலகத்திற்குப் புதியவர்களுக்கும் இந்தக் கட்டுரை மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று எண்ணுகின்றேன். இந்த இதழில் இதுவரை நாம் அறிய வேண்டிய, புரிந்து கொள்ள வேண்டிய சில அடிப்படை விடயங்களைப் பற்றி உரையாடிக் கொண்டோம். தொடர்ந்து கணினியின் வரலாற்றுத் தகவல் சிலவற்றைப் பற்றிக் கவனிப்போம். ஹாவார்ட் பிசினெஸ் ஸ்கூலில் இருந்து டான் பிறிக்லின் (Dan Bricklin), பொன் பிராங்ஸ்ரன் (Bon Frankston) ஆகியோர் இணைந்து VisiCalc எனப்படும் விரிதாள் மென்பொருளை (Spreadsheet Software) உருவாக்கினார்கள். இது 1979 இல் அப்பிள் II கணினியில் பாவனைக்கு வந்தது. இந்த மென்பொருள் ஒரு நாலாவது தலைமுறை மென்பொருளாகக் (Fourth generation languages) கருதப்பட்டது. இந்த மென்பொருளின் மறுவடிவம் பின்னர் Tandy TRS 80, Commodore Pet , Atari 800 போன்ற கணினிகளில் பாவனைக்கு வந்தன. இதன் பின்பு இந்த மென்பொருளை Lotus Development Corporation வாங்கியது.




இதனை அடிப்படையாகக் கொண்டே 1983இல் நுகர்வோர் கணினிக்குரிய (Personal Computers) மென்பொருளாக Lotus 1-2-3 இனை உருவாக்கினார்கள். 1985ம் ஆண்டு காலப் பகுதியில் நான் கொழும்பில் பணிபுரிந்த காலத்தில் Lotus 1-2-3 மென்பொருளை பணிபுரியும் இடங்களில் பாவித்ததையும், இது பற்றிய பயிற்சிப்பட்டறைகளை நடத்தியமையையும் என்னால் நினைவுகூர முடிகின்றது. இக்காலத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த விரிதாள் மென்பொருளாக Lotus 1-2-3 விளங்கியது. கணக்கியல், தொழில் நுட்பம் போன்ற துறையில் உள்ளவர்கட்கு இந்த மென்பொருள் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. 1982 ஆம் அல்லது 1983 ஆம் அண்டில் இருந்தே மெல்ல மெல்ல பல்வேறு துறைகளில் உள்ளவர்களுக்கும் பயனளிக்கத்தக்க பயன்படு மென்பொருட்கள் (Application Softwares) பாவனைக்கு வந்தன. இதற்கான முக்கியமான காரணம் நுகர்வோர் கணினிகளின் வருகையை அடுத்து கணினியைப் பாவிப்போரின் தொகை சடுதியாக அதிகரித்தமை என்று கூறலாம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள்.

அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.
நன்றி. வணக்கம்.

தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com



# Annamalai University
## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

"நம் கலாச்சாரத்தை நாமே காத்திடுவோம்! வளர்த்திடுவோம்!"

*"Promoting and preserving our culture for the next generation"*

## தமிழ் வகுப்புகள் இம்மாதம் ஆரம்பம்

- கனடாவில் தமிழ் மொழிக்கும் கலைக்கும் பெருமை சேர்க்கும் ஆசிரியர்கள்
- மூன்று வருடங்களில் BA, இரண்டு வருடங்களில் MA பட்டங்கள்!
- இந்தியாவின் புகழ்பெற்ற பல்கலைக்கழத்தின் பட்டங்கள்
- தமிழில் PhD மேற்கொள்வதுற்கான வசதிகளும் செய்து தரப்படுகின்றன
- சைவ சித்தாந்தம், தமிழ் இதழியல், நாட்டுப்புறவியல் ஓர் ஆண்டு பட்டயப்படிப்பு




அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின்
முதல் தமிழ்த் துறை பேராசிரியர் (1931)

## YOGA – Classes begin October!

- The Best Diploma in Yoga - Teachers Training Program in Canada!
- Year round classes, taught by one of Canada's leading Yoga specialist!
- Theory and Practical classes
- Weekend classes from September to July
- Classes conducted in English and Tamil



## NEW Correspondence Programs

The following programs are available through Annamalai University India. All certifcates and study materials will be issued from India through Canada Campus

**Post Graduate Programs**
- M.Ed. (Master of Education)
- M.A. English
- M.A. Sociology
- M.A. Economics
- M.A. Business Economics
- M.A. History
- M.A. Population Studies
- M.A. Political Science
- M.A. International Relations
- M.A. Human Rights
- M.A. Social Welfare Administration
- M.A. Linguistics
- M.A. Translation Studies
- M.A. Philosophy, Religion & Culture
- M.Com.
- M.S.W. (Master of Social Work)

**Under Graduate Programs**
- B.Ed. (Bachelor of Education)
- B.A. English
- B.A. English & Communication
- B.A. Economics
- B.A. Business Economics
- B.A. History
- B.A. History and Heritage Management
- B.A. Sociology
- B.A. Human Rights
- B.A. Social Welfare Administration
- B.A. Political Science
- B.A. Public Administration
- B.A. Social Work
- B.B.A. (Bachelor of Business Administration)
- B.B.A. Computer Applications
- B.Com

**PG Diploma in:**
- Business Administration
- Marketing Management
- Tourism Management
- Advertising
- Foreign Trade
- Entrepreneurship
- International Business
- Retailing
- Public Administration
- Human Rights

**Diploma in:**
- English Journalism
- Mass Communication
- Human Rights
- Social Welfare Administration
- Public Administration
- Self Help Group Management
- Food & Nutrition

**PLUS MORE PROGRAMS AVAILABLE THROUGH OUR CORRESPONDENCE PROGRAMS!**

**416-777-AUCC (2822) www.myAUCC.com**

1240 Ellesmere Rd. Unit 101 Scarborough Ont. M1P 2X4

Facebook @ www.facebook.com/myAUCC YouTube @ CanadaAnnamalai

# ‘குடல் இறக்கம்’ யாரைத்தாக்கும்?

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

சப்த தாதுக்களால் ஆன எமது உடல் அடை அதிகரிப்பதினால் எம்மைப் பல்வேறு நோய்கள் பற்றிக் கொள்ளுகின்றன. நமது உணவு முறையில் இருந்து மேற்கத்தைய உணவு முறைக்கு நிற்கதியாகி உடலைப் பருமனாக்கி (பெருக்கை வைத்து) பற்பல நோய்களுக்கு இடம் அளிக்கின்றோம். இப்படியானவர்களுக்கு உடல் உழைப்பு, உடற்பயிற்சி, நடப்பு பயிற்சி இன்றியமை யாதன. இவற்றால் குடல் இறக்கம் ஏற்பட்டு எம்மைப் பலவியாதிகளுக்கு ஆளாக்கிக் கொள்ளும் இந்நிகழ்வு எமது உடல் எடை அதிகரிப்பாகும். குடல் இறக்கம் என்பது எமது வயிற்றில் உள்ள குடல், சவ்வுப் பகுதி சிறிய துவாரத்தின் வழியால் வெளிவருவது ஆகும். நமது குடல் பாகங்களில் இயற்கையாகச் சிறு துவாரங்கள் காணப்படுகின்றன. இத்துவாரங்கள் வயிற்றின் உள்பகுதியில் இருந்து மேல்வரை இணைக்கும். இதன் வாய்ப்பகுதி ஆனது எலாஸ்ரிக் போன்று காணப்படும். இந்த எலாஸ்திரக் விரிவடைவதினால் வயிற்றில் உள்ள குடல், மற்றும் குடல் சவ்வுப் பகுதி யாவும் வெளியில் வந்து கொள்ளும் என அறியமுடிகின்றன. இந்நிலையானது ஆரம்பத்தில் அழுத்த நிலை குடலில் ஏற்படும் போது துவாரத்தின் வழியே வெளிவந்து பின்பு அழுத்தநிலை குறையும் போது மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிவிடும். இப்படி நிலை ஏற்பட்டுப் பின்பு குடல் பகுதியில் நிரந்தரமாகத் தங்கி விடும். இப்படி நிலை ஏற்பட்டு குடல் பகுதியில் தொல்லைகளை ஏற்படுத்தும் இயல்புடையது.

வயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்யும் போது சில சமயங்களில் தையல் விலகி அதனூடாக துவாரங்கள் ஏற்பட்டு குடல் பகுதி வெளியிலே வந்து அப்படியே நிலையாக தங்கியும் விடும் எனக் கூறப்படுகின்றன. இப்படியான நிலையை குடல் இறக்கம் எனவும் அறியப்படுகின்றன. எனவே இப்படியான குடல் இறக்கப் பிரச்சினை வராதிருக்க நாம் முன் செய்ய வேண்டியது யாதெனில் எடை, உயரத்திற்கு ஏற்ப அதிகரிக்காமல் இருக்க எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு அதிக கலோரி உள்ள உணவுப் பதார்த்தங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மாமிச உணவுகளைப் பெரும் பாலும் தவிர்த்துக் கொள்வது மிக நன்று. நார்ச்சத்துப் பொருட்களை நன்கு பாவித்து வருதல் வேண்டும். மலபந்தம் ஏற்படா திருக்க வேண்டும். மரக்கறி தாவரவகை உணவுகளை கறியாகவோ, சூப்பாகவோ பாவிப்பதுடன் தகுந்த கீரைவகைகளையும் நன்கு உணவுடன் சேர்த்துண்பது மிக நன்மை பயக்கும்.



மேலும் மலபந்தம் நீடித்திருந்தால் தங்கள் குடும்ப வைத்தியர்களைச் சந்தித்து தகுந்த மலமிழக்கி மருந்துகளைப் பாவித்து பயன் பெற்றுக் கொள்ளவும்.

மேலும் இந்நோய் பெரும்பாலும் ஏற்படுவதற்கு என்ன காரணங்கள் உண்டு என்பதை பொதுவில் பார்ப்போம். அதாவது ஒழுங்கீனமற்ற உணவுகளை உண்ணுதல் (கண்டநேரங்கள்) உடற்பயிற்சி, நடைப்பயிற்சி, ஈடுபாடு அற்று இருத்தல் மேலும் கருத்தடை மாத்திரைகளைப் பாவித்தல், மலம் செல்வதற்கு தடையாக வுள்ள மலச்சிக்கல், உடல் பருமல் அளவு மீறுதல் பாரமான பொருட்களைச் சுமத்தல் அல்லது (தூக்குதல்) வயிற்றுக்கு அதிகப்படியான அழுத்தம் கொடுத்தல் அறுவை சிகிச்சையின் பின் வயிற்சைச் சரியான முறையில் பராமரிக்காமல் விடுதல், அறுவை சிகிச்சை மூலம் சிசுவை பெற்ற பின் கவனிப்பின்மை. சமசீர் உணவுப் பொருட்களை வயதிற்கு, உடல் நிலைக்கு, தொழிலுக்கு ஏற்ப கையாளத்தவறுதல். மேலும் உடற்பயிற்சி குறிக்கப்பட்ட நேரம் கையாளாத தன்னையாலும் ஏற்படலாம். இத்தகைய நோய்க்கான அறிகுறிகளை ஆராயும் போது எமக்கு என்ன நிகழும் என்பதை ஓரளவு பார்ப்போம்.

அடிவயிற்றில் அல்லது பொக்கிள் பகுதியில் அழுத்தத்துடன் வலித்தன்மை தென்படும். திடீர் வீக்கம் ஏற்பட்டும் இதனை அழுத்தினால் அல்லது படுத்தால் வீக்கநிலை மாறி மறைந்து விடும் தன்மை இருக்கும். வயிற்றுப் பகுதியில் மந்தநிலை ஏற்பட்டு வலிப்புத்தன்மை தொடர்ந்து தொல்லையை விளைவிக்கும். இப்படியான நிலைக்கு சிகிச்சை பெற்ற பின் தங்கள் வைத்தியர்கள் தகுந்த பராமரிப்பு நிலைகளை கூறிக் கொள்வார்கள்.

இருந்தும் சிலவற்றை கூறினால் பயன் பெறமுடியும் எனக் கருதுகின்றேன்.

இப்படி நிலையானவர்கள் கீழே நேராக குனிவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வீக்கம் உள்ள இடத்தில் அதற்குரிய அழுத்தம் கொடுக்கும் பெல்ட் அணிவது நன்று. அதிக பாரமுள்ள பொருட்களைத் தூக்க முயற்சிக்க கூடாது. குறைந்த அளவில் அதிக இடைவேளையில் உண்பதற்குப் பழகிக் கொள்ள வேண்டும். (அடிக்கட உணவு எடுப்பது தவிர்த்தல் வேண்டும்) வயிற்றுப் பகுதியை பூரணமாக நிரப்பாது இருத்தல் வேண்டும். காரவர்க்க உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். பெரும்பாலும் இலகுவில் சீரணமாகும் உணவுப் பதார்த்தங்களை கையாள வேண்டும். அதிகதூரம் நடத்தல், பாயத்தல், ஓடுதல் தவிர்த்தல் வேண்டும்.

மேலும் இந்நோய் எம்மைப் சேராதிருக்க உடம்பு உயரத்திற்கு ஏற்ப நிறை சமமாக இருக்க வேண்டும். எடை அதிகரித்தால் பாதிப்புகள் பலவாகும். நார்ச்சத்து உணவுகள் உ+ம் தவிடு, தோல் பகுதி தவிடுநீக்காத அரிசிவகை சாலச்சிறந்தவை ஆகும். (பொருட்களின் தோல்பகுதி பாகம்) பழவர்க்கம், கீரைவகை, சூப்புவகை பாவித்து வருதல் வேண்டும் அத்துடன் காய்கறிவகை, சலாட்டு போன்வற்றையும் தவறாது உணவுடன் பாவிப்பது மிக நன்மை பயக்கும. மாமிச உணவுகளை தவிர்த்து கொள்வதுடன், கொழுப்புப் பதார்த்தங்களை யும் எடுக்காமல் விடுதல் மிகநன்று விரும்பின் மரக்கறி எண்ணெய் ஓரளவு பாவிப்பதினால் கெடுதி அவ்வளவு ஏற்படாது.

எனவே நாம் சுகதேகியாக வாழ்ந்து வர வழியமைப்பது எம்மைப் பொறுத்தது என்பதை நாம் நன்கு அறிவோம்.

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)



**Tutoring Service by Qualified Experienced Instructors In GTA: Markham & Finch**



**Level: Grade 9 to up to university preparation**

**Courses:** Math and Science (Physics, Chemistry and Biology)
Weekly 2 hours/course - evening and weekends, Rate: $100/per month

**Instructors' Credentials:**
**B.Sc. in Chemistry: University of Ottawa:** ( M.Sc. in Bio-Chemistry)
**Pharma Post Diploma, (MBA/TECH)** (M.Sc. Maths. P.Eng)

**Location:** 5310 Finch Avenue East, Unit #9
Scarborough, ON, MIS 5E8

For Registration:
**Contact Sam: 416.320.8784 / 416.857.7603**
**riappa@hotmail.com**

# நீரிழிவுக்கு உள்ளாகும் ஆபத்தைக் குறைக்கும் விதம்


## "நலவாழ்வுப் பாங்கு" எய்துவதற்கு என்ன தேவை?

நலவாழ்வு வாழ்வு வாழ்ந்து, நோய் தடுப்பதற்கு நல்லுணவு, உடற்செயற்பாடு என்பவற்றின் உதவியை நாடுவது முக்கிய வழிமுறை ஆகும்.

கட்டுக்கதை: "எனக்கு கிட்டுமட்டான நீரிழிவு உண்டு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது."

"கிட்டுமட்டான நீரிழிவு" என்று ஒன்றும் இல்லை. ஒன்றில் உங்களுக்கு நீரிழிவு உண்டு அல்லது இல்லை. உங்கள் பரிசோதனைப் பெறுபேறுகளை விளங்கிக் கொள்வதற்கு உங்கள் மருத்துவருடன் உரையாடுவது முக்கியம். அப்படிச் செய்தால், உடல்நலம் பேணுவதற்கு உதவும் முக்கிய வழிமுறைகளை உங்களால் பின்பற்ற முடியும். உங்கள் குருதிக் குளுக்கோஸ் மட்டம் உயர்ந்தால், அதேவேளை நீங்கள் நீரிழிவு கொண்டவர் என்று கொள்வதற்குப் போதியளவு உயரவில்லை என்றால், அதனை உங்கள் மருத்துவர் "பாதிப்படைந்த குளுக்கோஸ் ஏற்புத்தன்மை" ("impaired glucose tolerance") அல்லது "உணவருந்தா நிலையில் பாதிப்படைந்த குளுக்கோஸ் ஏற்புத்தன்மை" ("impaired fasting glucose") என்று குறிப்பிடக்கூடும். அவ்வப்பொழுது உங்கள் குருதிக் குளுக்கோசை மருத்துவர் செவ்வை பார்ப்பார். நல்லுணவு உண்ணல், அதிக உடற்செயற்பாடு போன்ற நலவாழ்வுப் பாங்கு மாற்றங்கள் வகை 2 நீரிழிவையும், இதய நோயையும் தடுக்கவோ பின்தள்ளவோ உதவும் முக்கிய வழிமுறைகள் ஆகும்.

நல்லுணவு உண்பதை உங்கள் அன்றாட வாழ்வில் ஓர் அங்கம் ஆக்குக. உணவு வகைகள் அனைத்தும் நல்லுணவுள்




அடங்கும். அன்றாடம் ஒரு குறிப்பிட்ட உணவையோ உண்டியையோ உட்கொள்ளல் என்று அது பொருள்படாது. நீங்கள் அன்றாடம் உணவு உட்கொள்ளும் விதமே உங்கள் நல்லுணவுப் பாங்கைத் தீர்மானிக்கும். இதில் ஈடுபடத் தொடங்குவதற்கு, சில உதவிக்குறிப்புகள் வருமாறு:

- நன்கு உண்டு மகிழவும். உங்கள் குடும்பத்தவர்களுடனும், நண்பர்களுடனும் பகிர்ந்துண்ணும் வாய்ப்பை பயன்படுத்த தவற வேண்டாம். வாழ்வின் பேரின்பங்களுள் அது ஒன்று!
- நால்வகை உணவுத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் சரிநிகராகத் தேர்ந்துண்ணவும். தேர்ந்துண்பதில் கனடிய உணவு வழிகாட்டியின் துணையுடன் நல்லுணவு கொள்ளல் (Eating Well with Canada's Food Guide) உங்களுக்கு வழிகாட்டவல்லது. (இலவச பிரதி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு, ரொறன்ரோ சுகாதார இணைப்பை அழைக்கவும்: 416-338-7600).
- பல்வேறு உணவு வகைகளை நாடவும்! வெவ்வேறு உணவுத் தொகுதிகளிலிருந்து தேர்ந்துண்ணவும். ஒவ்வொரு தொகுதியிலும் வெவ்வேறு உணவு வகைகளைத் தேர்ந்துண்டு பார்க்கவும்.
- உங்கள் உடல் சொல்வதைச் செவிமடுத்துப் பழகவும். பசிக்கும்பொழுது புசிக்கவும். "நிறைந்த" உணர்வு ஏற்பட்டவுடன் நிறுத்தவும். அசௌகரியம் அடைந்தால், நீங்கள் அளவுக்கு அதிகமாக உண்டிருக்கலாம்! நீங்கள் உண்டு பழக நேரலாம். ஏனெனில் எங்களுள் பலர் உடல் சொல்வதைச் செவிமடுப்பதில்லை.
- அதிக மரக்கறி வகைகள், பழவகைகள், தவிடுநீக்காத தானிய வகைகளை உண்ண முயலவும்.
- கொழுப்புக் குறைந்த பாலுணவு, மென்மையான இறைச்சி, சொற்ப கொழுப்புக் கொண்டு அல்லது கொழுப்பின்றி ஆக்கிய உணவு வகைகளைத் தேர்ந்துண்ணவும்.
- உப்பு, மதுபானம், உயககநறைெ என்பவற்றை மட்டுப்படுத்தவும்.

நடமாடுவோம்! அன்றாடம் உடற்செயற்பாட்டில் ஈடுபடுவோம்!

உடற்செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு அதிக நேரமும், முயற்சியும் தேவை என்று நீங்கள் கருதுகிறீர்களா? உடற்செயற்பாட்டில் திளைத்து வாழ்வது எத்துணை எளிது என்பதை மேற்கொண்டு வாசித்தறியவும்!

- கொல்லை வளர்த்தல், நடத்தல், ஆடல், பிள்ளைகளுடன் விளையாடல் என்பவை எல்லாம் நீங்கள் உடற்செயற்பாட்டைப் பெருக்கித் திளைக்கும் வழிமுறைகள் ஆகும்.
- உடற்செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு என்றுமே காலம் பிந்தாது. மெதுவாகத் தொடங்கி, அன்றாடம் 30-60 நிமிடங்கள் வரை அதிகரித்து, மத்திமம் முதல் வேகமான உடற்செயற்பாட்டில் ஈடுபடவும். உங்கள் இதயத் துடிப்பை விரைவுபடுத்தவும்!
- உடற்செயற்பாட்டில் ஈடுபடல் என்பது, மெய்வல்லுநர் கூடத்துக்கோ உடற்பயிற்சி வகுப்புக்கோ செல்லல் என்று பொருள்படாது. நீங்கள் உடற்செயற்பாட்டைப் பெருக்குவதற்குப் பல வழிகள் உள்ளன. வெவ்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுப் பார்க்கவும். உங்களுக்கு உகந்ததைத் தேர்ந்தெடுக்கவும்.
- இம்மியளவும் நலம் பயக்கும் – உங்கள் காரை நிறுத்தி, நடக்கவும். அத்துடன் /அல்லது மேன்மேலும் படிக்கட்டைப் பயன்படுத்தவும்.
- உங்கள் செயற்பாட்டை நாள் முழுவதும் பரவலாக்கலாம் – அன்றாடம் மூன்று தடவைகளாவது 10 நிமிட செயற்பாட்டை மேற்கொள்ளவும்.
- கனடிய நல்லுடலியக்க வாழ்வுக்கான உடற்செயற்பாட்டு வழிகாட்டியின் (Canada's Physical Activity Guide to Healthy Active Living) பிரதி ஒன்றைப் பெற்றுக்கொள்வதே இதில் ஈடுபடுவதற்கான முதற் கட்டம் (இலவச பிரதி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு, ரொறன்ரோ சுகாதார

**தமிழ்: மணி வேலுப்பிள்ளை**

இணைப்பை அழைக்கவும்: 416-338-7600).

நீங்கள் மேன்மேலும் வலுப்படுவதற்கும், அயர்ச்சி தணிப்பதற்கும், உள்ளம் நிறைவதற்கும் நல்லுணவு கொள்ளல், உடலியக்க வாழ்வு என்பன உதவும். அத்துடன், நன்கு உண்பதற்கும், உடலியக்கத்தில் ஈடுபடுவதற்கும் இடையே ஒரு சமன்பாட்டைப் பேணிக்கொள்வது, உங்கள் உடல்நலத்தை மேம்படுத்தி, நீரிழிவுக்கும் மற்றும் பிற நோய்களுக்கும் உள்ளாகும் சாத்தியத்தை தணிக்க உதவும்.

நினைவில் வைத்திருக்கவும்…சிறிய படிகளே பெரிய மாற்றத்துக்கு இட்டுச்செல்லும். நலவாழ்வுப் பாங்கை நோக்கி எப்படி அடி எடுத்து வைக்கலாம் என்று உங்களை நீங்களே கேட்டுப் பாருங்கள்.

கட்டுக்கதை: "வகை 2 நீரிழிவு பாரதூரமானதல்ல."

நீரிழிவு வகைகள் அனைத்தும் பாரதூரமானவையே. இடைவிடாது உயரும் குருதிக் குளுக்கோசினால் உண்டாகும் நோயே கனடியரை வலுவீனத்துக்கும், இறப்புக்கும் இட்டுச் செல்லும் தலையாய காரணி ஆகும். நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் நீரிழிவுக்கு எதுவித பரிகாரமும் கண்டறியப்படவில்லை. இந்த நோயினால் விளையும் உடல்நலக்கேடுகளைத் தணிப்பதற்கும், தடுப்பதற்கும் கூட, வாழ்வுப் பாங்கில் மாற்றங்கள், மாத்திரைகள் அத்துடன்/அல்லது இன்சுலின் முக்கியம்.

கட்டுக்கதை: "அளவுக்கு அதிகமாக சீனி

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# சர்க்கரை நோயால் வரும் மூட்டு வலிகள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

சர்க்கரை என்றால் எல்லோருக்கும் இனிக்கும். சர்க்கரை நோய் என்றால் எல்லோருக்கும் கசக்கும்.

**சர்க்கரை நோய் எதனால் வருகிறது?**

1. உண்ட உணவு சரியாக சமிபாடடையாததாலும் உணவில் உள்ள குளுக்கோஸ், இனிப்பு அதிகமாக கலந்து விடுவதால் தான் சர்க்கரை நோய் வருகிறது.

2. தற்போது அதிக ரென்ஷன், கடும் உழைப்பு, தூக்கமின்மை, கவலை போன்றவை இந்த நோய் வர காரணமாகின்றது.

3. வயிற்றில் பொருமல் ஏற்படுவதால் கல்லீரல் (Liver) பாதிப்படைகிறது. இதனால் கணைய நீர் (இன்சுலின்) சுரக்காமல் இரத்தத்தில் கொழுப்பும் இனிப்புச்சத்தும் அதிகமாகி சர்க்கரை நோய்க்கு காரணமாகின்றது.

இந்த சர்க்கரை நோய் (Diabetes) ஒரு கொடிய நோயாக உலகம் முழுவதும் பரவி வருகிறது. இந்த நோய் மனிதர்களின் உடலின் தன்மைக்குத் தகுந்தவாறு பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. வாதம், பித்தம், வாயு, நீர் போன்றவற்றின் மாறுபாடுகளும் இந்த நோய்க்கு முக்கிய காரணமாகின்றது. இவற்றில் வாத உடற்கூறு உள்ளவர்களுக்கு தோள்பட்டை, கை, கால் மூட்டுகள் இறுக்கம் அடைந்து அவற்றில் உப்பு படியும் போது வலி ஏற்படுகிறது.


பித்த நீர்வாகு கொண்ட உடற்கூறு உள்ளவர்களுக்கு சர்க்கரை நோய் வந்தால் கை, கால் மூட்டுப் பகுதிகளில் கடும் எரிச்சலும் வீக்கமும் ஏற்படும்.

வாயு (Gas) உடற்கூறு உள்ள சர்க்கரை நோயாளிகளுக்கு குத்துவது போல வலிக்கும். கால் பாதங்களில் ரத்த ஓட்டம் குறைந்து நகங்களில் உட்புறம் புண்ணாகி வலிக்கும். சில வேளைகளில் கால்களையே எடுக்க வேண்டிவரும். அத்துடன் மேற்குறிப்பிட்ட உடல்வாகுகள் உள்ளவர் களுக்கு சர்க்கரை நோய் ஏற்படும்போது எலும்புகள் பலவீனமாகித் தேய்ந்து போகலாம்.

நீர் தன்மையுடைய (கபம்) உடல் அமைந்தவர்களுக்கு ரத்தத்தில் சளி அதிகமாக உற்பத்தியாகும். அவர்களுக்கு சர்க்கரை நோய் வந்து சேரும் போது கை, கால் கழுத்துப் பகுதிகளில் எலும்புகள் வலிமை குறைந்து வலிகள் உருவாகும். பொதுவாக நீரிழிவு நோயாளிகளுக்கு கை, கால், பாதம், பெருவிரல் போன்றவற்றில் அதிகம் பாதிப்பு உண்டாவதோடு கால் பாதங்களில் உப்பு நீர் படிந்து நடக்கும் போது அசௌகரியங்களை ஏற்படுத்தும். மேலும் காயங்கள் ஏற்பட்டால் தெரிவதில்லை. பின் அது பெரிய புண்ணாக மாற வாய்ப்புண்டு. அநேகருக்கு உடலில் ரத்த ஓட்ட அளவு குறைந்து கைகள், கால்கள், தோள்பட்டையில் விறைப்பு ஏற்படுவதுண்டு. எனவே இவ்விதமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் சர்க்கரை நோயிலிருந்து விடுபடமுடியாதா? இதனை பூரணமாக குணப்படுத்த இந்திய மருத்துவத்தில் பலமுறைகள் உண்டு. முதலில் இடையிடையே டாக்டரிம் அணுகி பரிசோதித்துக் கொள்ள வேண்டும். உடலில் காயங்கள் ஏற்படாது பார்க்க வேண்டும். கடந்த காலங்களில் இவ்வாறான வலிகளுக்கு நாட்டு வைத்திய முறைகள், மூலிகைகள், இயற்கை உணவுமுறைகள் போன்றவற்றைக் கொண்டு குணப்படுத்த முடிந்தது. ஆனால் தற்போதைய விஞ்ஞான உலகில் மாத்திரை, ஊசி போன்றவற்றையே நம்பியிருந்து முடிவில் சிரமப்படுவதையே காண்கிறோம். நாட்டுப்புறங்களில் மூலிகைகளின் உபயோகத்தால் இதனைக் குணப்படுத்துகின்றனர்.

ஆனால் நிச்சயமாக யோகா, தியானப் பயிற்சிகள் போன்றவற்றால் சர்க்கரை நோய் கட்டுப்படுத்துகின்றது. அதற்குக் காரணம் இத்தகைய பயிற்சிகளினால் மனம் அமைதி யடைகிறது. ரத்த ஓட்டம் சீரடைகின்றது. உடல் சமநிலை அடைகிறது. எனவே கணையநீர் (இன்சுலின் ஒழுங்காக சுரக்கிறது. இதனால் உடலில் எரிசக்தி அதிகரித்து உணவில் உள்ள கொழுப்பு பொருள் சீராக செரிமானமாகி இரத்தமாகவும், நீராகவும், ஆவியாகவும் மாற்றுகிறது. இதனால் உடல் சீரடைகிறது. இதனால்தான் நம் முன்னோர்கள் யோகா, சுவாசம் பயிற்சி, தியானம் போன்றவற்றை வாழ்வில் அன்றாடம் கடைப்பிடித்து வந்தால் நீரிழிவு நோய் மற்றும் கர்ம வியாதிகள் எவையேனும் நம்மை வந்தடைய வாய்ப்பில்லை என்று கூறிச் சென்றுள்ளனர்.

எனினும் இந்த நோய் பரம்பரையாக வருவது. எனவே அதனை குணப்படுத்த முடியாது என்று நாமே சமாதானம் சொல்லி



இந்த கொடிய நோயை அனுமதிப்பது அறியாமையாகும். நமது வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதன் மூலம் நீரிழிவு நோயை வராமல் தடுக்கமுடியும். அப்படி வந்தால் முழுமையாக இல்லாமல் செய்யவும் முடியும். இது உறுதி.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

# நீரிழிவுக்கு...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

உட்கொள்வதால் நீரிழிவு ஏற்படும்" அளவுக்கு அதிகமாக சீனி உட்கொள்வதால் நீரிழிவு ஏற்படாது. நீரிழிவு ஒரு சிக்கலான நோய். பரம்பரை, வாழ்வுப்பாங்கு போன்ற பல



காரணிகளால் அது உண்டாகக் கூடும். ஒருவர் நீரிழிவு கொண்டவர் என்று கண்டறியப்பட்டவுடன், அவர் சீனி உட்கொள்வதை மட்டுப்படுத்த வேண்டும். நல்லுணவு கொள்ளும் உங்கள் வாழ்வுப்பாங்கில் சீனி சேர்க்கும் விதம் குறித்து ஓர் உணவியலருடன் உரையாடவும்.

எனக்கு நீரிழிவு உண்டா என்பதை நான் எப்படிக் கண்டறிவது?


நீங்கள் அறியவேண்டிய அறிகுறிகளுள் சில வருமாறு:

- மிகுந்த தாகம்
- எடை கூடல் அல்லது குறைதல்
- பார்வை மழுங்கல்
- கை அல்லது பாதம் விறைத்தல்/கூசுதல்
- அடிக்கடி சிறுநீர் கழிதல்
- களைப்பு மிகுதல், வலுவின்மை
- அடிக்கடி அல்லது திரும்பத் திரும்ப நோய்க்கிருமி தொற்றல்
- காயம், புண் ஆறத் தாமதித்தல்

நீங்கள் 40 வயதானவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் என்றால், நீங்கள் வகை 2 நீரிழிவுக்கு உள்ளாகும் சாத்தியம் உண்டு. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவையாவது நீங்கள் பரிசோதனைக்கு உள்ளாக வேண்டும். உங்களை நீரிழிவுக்கு உட்படுத்தக்கூடிய காரணிகள் வேறு எவையும் இருந்தால், நீங்கள் வயதுப் பாகுபாடின்றி மேன்மேலும் பரிசோதனைக்கு உள்ளாக நேரலாம்.

நீங்கள் வகை 2 நீரிழிவு கொண்டவர் என்று கண்டறியப்பட்டால், நீரிழிவைக் கட்டுப்படுத்தி, எதிர்காலத்தில் அந்த நோயினால் மேலும் உடல்நலக்கேடுகள் விளைவதைத் தடுப்பதற்கு ஏதுவாக, உடல்நலம் மிகுந்த வாழ்வுப்பாங்கை நோக்கி மாற்றங்கள் ஏற்படுத்துவது முக்கியம்.

மேலதிக விபரங்களுக்கு
நீங்கள் நீரிழிவுக்கு உள்ளாகும் சாத்தியம் ஏற்படக்கூடும் என்றோ அல்லது உங்கள் உடலில் நீரிழிவின் அறிகுறிகள் தென்படுகின்றன என்றோ நீங்கள் கருதினால், உங்கள் குடும்ப மருத்துவருடன் உரையாடவும்.

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில்
தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்

2%* முதல்

SKN FINANCIAL
(Pawn Brokers)

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
முழுக்காப்புறுதி செய்யப்பட்ட ஒரே நிறுவனம்

416-269-5393

உங்கள் பெறுமதியான நகைகளை விற்க வேண்டாம்!
மிகக் குறைந்த வட்டிக்கு எம்மிடம் அடகு வைத்து உங்கள் உடனடிப் பணத்தேவையைப் பூர்த்தி செய்த பின்னர் நகைகளை மீட்டுக் கொள்ளலாம்.

GOLD LOAN

ஏற்கனவே அடைவில் இருக்கும் உங்கள் நகைளைக் குறைந்த வட்டியில் மீள் அடைவு செய்ய நாம் உதவுவோம்.

- அவசரப் பணத் தேவையா?
- புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- புதிய மனை வாங்குவதில் பணச் சிக்கலா?
- உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்கு பல விதமான திட்டங்கள் உள்ளன!
- வட்டித் தொகைக்கு வரி விலக்குப் பற்றுச் சீட்டு வழங்கப்படும்

உங்கள் நகைகளுக்கு பாதுகாப்பு,
குறைந்த வட்டி, நிறைந்த பெறுமதி,
அன்பான சேவையைக்
கனடாவில் வழங்கும் ஒரே நிறுவனம்.

5 நிமிடங்களில் உங்கள் கையில் பணம்
இன்றே நாடுங்கள்

SKN FINANCIAL
(Pawn Brokers)
4-2677 Eglinton Ave. East
Scarborough, ON M1K 2S2 (Eglinton & Brimley)

SKN FINANCIAL is operated by
SKN CONSUMER FINANCE LTD.

* 2% per month equivalent to 24% per annum
Terms and conditions may apply

PRINT FAST.ca :: 416 752 3278


நவம்பர் 3 2012
ROGERS CENTRE
Trinity Events
VIJAY TV PARTNER
PRESENTS
எங்கேயும் எப்போதும்
ராஜா
8ற்கும் மேற்பட்ட தென்னிந்திய திரைப்பட பிரபலங்கள்
15க்கும் மேற்ப்பட்ட பாடகர்கள்
100க்கும் மேற்ப்பட்ட இசை, தொழில் நுட்ப கலைஞர்கள்
பங்குபெறும் மாபெரும்
இன்னிசை நிகழ்ச்சி
TICKETS AVAILABLE AT:
SCARBOROUGH
PHOTO FAST LTD
416-757-1623 416-230-3733
ANNAMS JEWELLERS
416-265-9166
KUMAR VIDEO
416-292-9043
NANTHA CATERING
416-626-8421
UTHAYAS SUPERMARKET
416-742-1425
MARKHAM
MARKHAM VIDEO
905-294-4253
SOUTH ASIAN SUPER MARKET
905-201-9833
MISSISSAUGA
NEW KAVERI SUPER MARKET
905-290-6925
BRAMPTON
GOLUMBIA VIDEO
905-456-8433
VAUGHAN
MAPLE SHANGHAI
905-417-6069
MONTREAL
514-944-9315
TICKETS:
VVIP
$150.00(VIP)
$100.00
$80.00
$60.00
$39.00
TOLL FREE : 1.855.554.4554
ticketmaster
1-855-985-5000
www.trinityeventsonline.com




Offer available to new Rogers Digital TV customers in cable serviceable areas in Ontario until November 6, 2012 and subject to change without notice. Basic Cable and Digital/HD Box required to receive Digital/HD programming. Channel availability may vary by region. Taxes extra. Regular monthly rates apply after promotional period. **1** Includes monthly Digital Service Fee of $2.99, standard definition digital box rental of $4.49, and where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1% of the recurring TV monthly service fee. An Early Cancellation Fee applies. **2** Savings based on $19.18/mo. (Digital Basic TV monthly discount including Local Programming Improvement Fund Fee) for 2 years. © 2012

# சில மணி நேரத்தில் வீட்டில் இருந்துகொண்டு $100 இல் இருந்து $1000 வரை சம்பாதிப்பது எப்படி?







## சந்தையை தீர்மானிக்கும் சூப்பர் பவர்கள்!

தெளிவான திட்டமிடல், நேர்த்தியான அணுகுமுறை,
தொடர்ச்சியான ஆர்வம், தளராத மனநம்பிக்கை
இதனோடு கொஞ்சமே கொஞ்சமாய் பணம் இருந்தால்
போதும் சாதித்து விடலாம், சாதிக்கலாம் வாருங்கள்!

## EMini S&P500 டெக்னிக்கல்ப் பார்வை:

டெக்னிக்கலாக ஸ்ட்ராங்காகவும், ஃபண்டமென்டல் செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாகவும் வந்து சந்தையை நல்ல வேகத்தில் மேலே எடுத்துச் சென்றுவிட்டது EMini S&P 500 - 1468 என்பது மிகச் சுலபமான டார்கெட்டாகவும் 1443 WILL PENETRATE TO 1457 AND 1468 TO MAKE A NEW HIGH 1474 & 1487 TO REACH 1505 வரையிலும் போகும் பலம் பெற்றதாகவும் சந்தை மாறியுள்ளது. செய்திகள் பாசிட்டிவ்வாக வந்துகொண்டேயிருப்பதால் இந்த டார்கெட் வந்தேவிடலாம். அதே சமயம் தற்பொழுது 1424 Retracement செய்துள்ளது,1428 WILL SLIDE DOWN TO 1417 AND 1409 TO HIT THE PREVIOUS LOW 1387!

222-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2



# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

◊ கனி ◊

'வாங்கோ பாதர், வாங்கோ' என அழைத்தான் சிவா. வீட்டின் உள்ளே வந்த பாதருக்கு வயது நாற்பது அல்லது நாற்பத்தி ஐந்து இருக்கும். நல்ல உயரத்தில் இருந்தார். ஆறு அடிக்கு ஒரு அங்குலமாவது கூடவாகத்தான் இருப்பார். உயரத்திற்கு ஏற்ற பருமனில் நல்ல கம்பீரமாகத் தோற்றமளித்தார் பாதர், டேவிட் வில்சன் அருள்தாசன். எல்லோரும் 'பாதர் அருள்' என்றே அழைப்பார்கள். நேரிய தீட்சன்னியமான பார்வை, அழகான ஆணித்தரமான வார்த்தைகள், காண்போரை, கேட்போரை அவரின்பால் ஈர்ப்பதுடன் ஒருவித பயம் கலந்த மரியாதையை கொடுக்க வைக்கும். வேற்று மத மக்கள் கூட அன்பாக பாதர் அருள் என்று கூறுமளவிற்கு ரொறன்ரோ, மாக்கம் பகுதிகளில் பிரபல்யமான மதப் போதகர். ஏனைய மாதங்களை மதிக்கும் அவரது தன்மையானது எல்லோரையும் மிகவும் கவர்ந்திருந்தது. ஆனாலும் தன் மத ஈடுபாடுகளில் மிகவும் வைராக்கியமானவர். தூய்மையான மத நடவடிக்கைகளினாலும், வைராக்கியமான செபங்களினாலும், நியாயமான அறிவுரைகளினாலும் அனேகரை நல்வழிப்படுத்தியிருக்கின்றார். அநேகரின் நோய்களை, மனக்கிலேசங்களை தேவ அருளுடன் நீக்கி, மக்களுக்குப் பல நன்மைகள் செய்தவர் என்று பெயர் பெற்றவர். எப்பொழுதுமே முகத்திற் கொண்ட அன்பான புன்முறுவலுடன் 'கிறிஸ்துவின் அருள் எப்பொழுதும் உங்களுடனும், உங்கள் குடும்பத்தவருடனும் நிறைவாக இருக்கட்டும், றொபேர்ட்' என்ற ஆசி வார்த்தைகளுடன் வீட்டினுள்ளே நுழைந்த பாதர் அருள், வாசலில் ஒரு கணம் தயங்கி நின்றவர், உள்ளே கவனமாகப் பார்த்து விட்டு, வீட்டினுள்ளே நுழைந்தார். சிவராசாவை எப்பொழுதும் றொபேர்ட் என்றே அழைப்பார் பாதர் அருள்.

வீட்டின் உள்ளே நுழைந்த இரண்டடி எடுத்துவைத்தவர், சற்று நேரம் அப்படியே நின்று வீட்டின் உள்ளமைப்பைப் பார்த்தார். வெளிர் நீலநறத்தில் வீட்டின் உள்ளே, வரவேற்பறைக்கு நிறம் அடிக்கப்பட்டிருந்தது. பகல் பதினொரு மணிதான். கதிரவனின் வெளிச்சம் தாராளமாகவே உள்ளே புகுந்து சிவாவின் வரவேற்பறையை நல்ல வெளிச்சமாகக் காட்டியது. தளபாடங்கள், வீட்டு வரவேற்பறைப் பொருட்கள் எல்லாம் நேர்த்தியாக வைக்கப்பட்டு அறை அழகாக இருந்தது. வரவேற்பறை அறையின் வாசலின் நேர் எதிரில் இருந்த சுவரில் ஒரு ஆளின் உயரத்திற்குச் சற்று உயரமாக 'நான் எப்பொழுதும் உன்னுடனேயே இருப்போன். உன்னை விட்டு ஒருபொழுதும் அகல்வதே இல்லை' என்ற இறைவாசகம் பொருத்தப்பட்டு இருந்தது. எவ்வளவுதான் அழகாகவும் நேர்த்தியாகவும் இருந்தாலும் ஏதோ ஒரு குறை வீட்டின் பிரகாசத்தை குறைப்பது போல் தெரிந்தது பாதர் அருளுக்கு. 'ஏன் பாதர் நிக்கின்றீர்கள். வந்து இருங்கோ.' என்ற சிவாவின் குரல் கேட்டுத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டவர், சிவா காட்டிய இருக்கையில் அமைதியாக இருந்து கொண்டார். 'நன்றி' எனக் கூறிய பாதர் சிவாவைப் பார்த்து புன்முறுவல் ஒன்றை உதிர்த்தார். ஏதோ கூற அல்லது கேட்க முற்பட்ட பாதருக்கு முன்னதாக சிவாவின் குரல் வந்தது. 'பயணமெல்லாம் எப்படி இருந்தது பாதர்? எல்லாம் நல்ல விதமாக முடிந்ததோ' என்ற சிவாவிற்கு, 'ஓமோம், ஆண்டவன் கிருபையால் எல்லாமே நல்ல விதமாக நடந்து முடிந்தது, றொபேட்' என்றார் பாதர் அருள்.

றொபோர்ட், சிவா என்ன குழப்பமாக இருக்கின்றதா! சிவாவைப் பாதர் எப்பொழுதுமே றொபேர்ட் என்றுதான் அழைப்பார். நாமும் இனிச் சிவாவை பாதரின் முன்பாக றொபேர்ட் என்றே அழைப்போம், என்ன! பாதர் அருள் தனது மதவிடயமான மூன்று மாதச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு சென்ற கிழமைதான் கனடா திரும்பியிருந்தார். திடீரெனப் பயணப்பட்டதால் இரண்டு மாதங்களின் முன்னராக நடந்த சிவராசாவின் அட றொபேர்ட்டின் புதுமனைப் புகுவிழாவிற்கு பாதரால் சமூகமளிக்க முடியவில்லை. கையில் இருந்த சிறு பொதியை சிவராசாவிடம் நீட்டிய பாதர் அருள் 'புதுமனைப் புகுவிழாவிற்கு வரமுடியவில்லை என்றாலும் தேவ அனுக்கிரகத்துடன் சகலதும் சிறப்பாக நடைபெற்றதை அறிந்து கொண்டேன். என்னூடாகத் தேவன் உங்களுக்குத் தரும் இந்தச் சிறிய அன்பளிப்பை ஏற்றுக்கொள்ளுங்கள் தேவன் உங்களையும் இந்தப் புதுவீட்டையும் ஆசீர்வதிப்பாராக' எனப் பாதர் அருள் கூறுகையில் சிவராசாவின் மனைவி நீலவேணி வீட்டின் உள்ளேயிருந்து வந்தாள். வழமைபோல் 'வணக்கம் பாதர்' என்றவளின் குரலில் கொஞ்சம் தொய்வு இருப்பதை அவதானித்தார் பாதர் அருள். 'வணக்கம் றோசலின். என்ன! புதுவீடு களைக்க வைத்துவிட்டதோ' பாதர்.

'இல்லை, ஓமோம், இல்லை.' என்றவள்,

தொடர்ச்சி 28ஆம் பக்கம்



# BASEMENT RENT

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Laundry. Close to all facilities. ஒரு பெண் விரும்பத்தக்கது. Avail. Anytime. Low rent.
தொடர்புகளுக்கு: 905.471.1986

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, laundry. Close to TTC, school, mall, library. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.831.8549

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom new bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Rent $650. Avail. immediately.
416.520.1699 / 416.298.1699

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. Anytime.
416.871.3414 / 416.473.8520

**BRIMLEY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.264.9977 / 647.856.1410

**MCCOWAN & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.706.4922 / 416.522.3314 / 905.554.2496

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.947.8018

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.505.2254

**MARKHAM & STEELES**
2 Bedroom spacious, bright bsmt for rent. Sep. entrance, parking, laundry. Closet o all facilities. No Smoking & No Pets. Avail immediately.
தொடர்புகளுக்கு: 416.726.5122

**MORNINGSIDE & HWY 401 (MILITARY TRAIL)**
சோமகாந்தனை விவாகம் செய்தபின் தலை-நகர வாழ்க்கை தொடங்கிவிட்டது. அக்கால கட்டத்தில் தம் கல்வித்தகைமைகளையும் வளர்த்துக் கொண்டார். கணவன், மனைவி ஒரே துறையைச் சார்ந்தவர்களாயின் அவ்வத்துறையில் முன்னேற ஒருவருக் கொருவர் ஊக்கமும் உற்சாகமும் அளித்து உதவியும் புரிவார்கள். அப்படி சில தம்பதிகளை யாம் அறிவோம். மனோன்மணி சண்முகதாஸ், சித்திரலேகா மௌனகுரு, கமலினி செல்வராசா போன்றோர் அவ்வகையுள் அடங்குவர். இத்தம்பதியான பத்மாவும் சோமகாந்தனும் தலைநகரிலே வசித்தமை எழுத்தாளர் மத்தியில் மாத்திர மல்ல சகலவிதமான சமூக ஊடாட்டகளிலும் பங்கேற்றனர். முஸ்லீம் எழுத்தாளருடன் இணைந்தும் நட்புப்பாராட்டியும் ஒரு அடையாளம் கொடுத்ததோடு சிங்கள எழுத்தாளர்களையும் மன்றங்களுக்கு அழைத்து அனுபவங்களைப் பகிர்ந்தும் கண்ணியமாக நடந்து கொண்டனர்.

இந்தியாவிலிருந்து வரும் எழுத்தாளர் களையும், அறிஞர்களையும் வரவேற்பதும், கூட்டங்களை ஒழுங்கு பண்ணிக்கொடுத்தும் கௌரவம் கொடுத்தனர். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பல்வேறு பதவி களையும் வகித்துள்ளனர். அதி விசேடமாக பெண்களின் சகல ஒழுங்குகளையும் பத்மாவே பார்த்துக்கொண்டார். பெண்கள் எழுத்தாளர் சங்கம், மகளிர் அமைப்பு போன்றவற்றைத் தோற்றுவித்தும் மகளிர் சம்பந்தமான பத்திரிகைகளின் ஆசிரியராக பதவிகளையும் வகித்தார்.

வெளிநாடுகளில் இருந்து வரும் அழைப்புகளுக்கு பத்மா பேச்சாளராக, பங்காளராக, ஆலோசகராக அழைக்கப் பட்டார். சோமகாந்தனிடம் நிர்வாகத் திறமை இருந்தது. பத்மாவிடம் கருத்துவளம் அபரிமிதமாக இருந்தது. 1934 ஆம் ஆண்டு பிறந்த பத்மா பல பெண் எழுத்தாளர்களின் முன்னோடியாகத் திகழ்கிறார்.

'பெண்களின் சூழ்நிலைகளையும், வாழ்வு நிலைகளையும் நன்கு அறிந்து பெண்களை மேம்படுத்தி எழுதுவதைத் தமது நெறியாகக் கொண்டவர்' எனக் கூறிய செங்கை யாழியான் பிற்காலத்தில் 'பத்மாவின் கருத்துக்களும் போக்குகளும் விரிவடைந்து செல்வதைக் கண்டு சமூகம், மொழி, சமயம், பண்பாடு, குழந்தை இலக்கியம் எனத் தனது படைப்புத் தளத்தை விரிவுபடுத்தியுள்ளார்' என மேலும் கூறுகிறார். தமிழ் தேசிய உணர்வுக் காலத்தில் இவர் எழுதிய சிறுகதைகள் சில 'சக்தி', 'ஒரு தளிரும் இருஇலைகளும்', 'பாலுக்குபாலகன் வேண்டியழுதிட' போன்ற சிறுகதைகள் உள்ளத்தைத் தொட வைத்தன. போர்க்கால சூழலில் எழுந்த 'பனங்காணி', 'நைவேத்தியம்' என்பன பலரதும் பாராட்டைப் பெற்றனவாம்.

பத்மாவுக்கு ஊக்கம் அளித்து, உற்சாகம் ஊட்டி எழுத்துத்துறையைச் சோரவிடாது பாதுகாத்தவர்கள் செ. கணேசலிங்கனும், பிரேம்ஜி (ஞானசுந்தரம்) யும் ஆவார். கடவுளின் பூக்கள், புதியவார்ப்புகள், வேள்வி மலர்கள் எனும் மூன்று சிறுகதைத் தொகுதிகளும், 'பக்த அனுமன் கதை' எனும் சிறுவர் இலக்கிய நூலும் வேறும் கட்டுரை நூல்கள் 'சின்மயானந்தா', 'Stories from Hindu Myth' (ஆங்கிலம்) வெளியிட்ட நூல்களாகும்.

கொள்கை களிலும் இலட்சியப்போக்கு களிலும் ஒத்த கருத்துக்களைக் கொண்டிருந்தமையாற் போலும் எமது நட்பு நீண்டு நின்று நிலவுகிறது. ஈழத்தில் பட்டிமன்றங்களில் நாமிருவருமே மேடைப் பேச்சுகளில் முன்னின்றமையால் எதிரெதிராக வைப்பார்கள்.

தற்போது அவற்றை ஒட்டியும் வெட்டியும் பேசியதை நினைவுகூர்ந்து பேசிச் சிரித்துக் கொள்வோம். அதனால் கம்பனும் பாரதியும் சிலம்பும் மீண்டும் நினைவூட்டப்படுகின்றனர். அவை முதுமைச் சலிப்பை போக்க உதவுகிறன.



**வள்ளிநாயகி இராமலிங்கம்**

# TIFF 2012...

### 30ஆம் பக்கத்தொடர்ச்சி

மத்தியில் வரவேற்பு பெறவேண்டும் எனத்தான் நினைக்கின்றார்கள். Anurag Kashyap , Dibakar Banerjee மாற்றங்களை ஏற்படுத்த முயல்கின்றனர் என்று தெரிவித்தார். இதே நிகழ்வில் கடந்த காலங்களில் Buenos Aires , Istanbul, Tel Aviv போன்ற நகரங்களைப் பற்றிய திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

சல்மான் ருஸ்டியின் Midnight Children என்ற நாவலை மையமாகக் கொண்டு வெளிவந்த தீபா மேத்தாவின் திரைப்படம் பெரும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்திய திரைப்படமாகும். ருஸ்டியின் நாவல்களை படமாக்குவது என்பதே கடினம். திரைப்படம் வெளிவந்த பின்னர் ஈரான் ருஸ்டிக்கான தண்டனையை அதிகரித்துள்ளது. தலைமறைவு வாழ்க்கை வாழும் ருஸ்டியை நோக்கி கொலைக் கரங்கள் எப்போது எனக் காத்துக் கொண்டிருக்கின்றன. ருஸ்டி துணிச்சலான மனிதர், சிவப்புக் கம்பள விரிப்பில் கலந்து கொண்டார். இவரும் இயக்குனர் தீபா மேத்தாவும் ஒன்றாக நடந்து வந்தனர். அடுத்த லிபரல் கட்சியின் தலைவராகவும், பிரதமராகவும் வரலாம் என எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ள முன்னாள் கனடிய பிரதமர் ரூடோவின் மகன் ஜஸ்ரின் ரூடோ இந்திய உடை அணிந்து கலந்து கொண்டார்.

ஸ்ரீதேவி நடித்த English Vinglish, 77 வது வயதான கிரிஸ் கர்ணவாளியின் இயக்கத்தில் The Tortoise, An Incarnation, மீரா நாயரின் The Reluctant Fundamentalist போன்ற இந்திய திரைப்படங்கள் திரையிடப்பட்டன. உலகின் மிகச்சிறந்த படங்களுள் ஒன்றாக கருதப்படும் The Battle Of Algiers படத்தின் இயக்குனர் Gillo Pontecorvo வின் மனைவி Teresa Ricci வெனிஸ் திரைப்படவிழாவில் மீரா நாயரைச் சந்தித்து 'எனது கணவரின் ஆன்மா உங்களது படத்தில் தெரிகிறது' எனத் தெரிவித்தாக மீரா நாயர் செவ்வி ஒன்றில் தெரிவித்துள்ளார். அப்படி என்னதான் உள்ளது. அடுத்த இதழில் பார்ப்போம்.



இவ் வருட விழாவில் விருதுகள் பெற்ற படங்கள்

| Award | Movie |
|---|---|
| People Choice Award | Silver Linings Playbook |
| Midnight Madness Award | Seven Psychopat hs |
| People's Choice Documentary Award | Artifact |
| Best World or International Asian Feature Film | The Land of Hope |
| Grolsch Film Works Discovery Award | Detroit Unleaded |
| International Critics (FIPRESCI) | Call Girl |
| International Critics (FIPRESCI Prize) for Special Presentations | Dans la maison |
| BEST CANADIAN FIRST FEATURE FILM | Antiviral, Blackbird. |
| BEST CANADIAN FEATURE FILM | Laurence Anyways. |
| BEST CANADIAN SHORT FILM | Keep a Modest Head |

# ஓவியாவின் ஓவியங்கள்



பள்ளிக்கூடத்தில் ஓவியப்பாடம் தொடங்கும் நேரம் வரும் போது, வகுப்பில் இரு பிள்ளைகளுக்கு ஆவல் அதிகமாக இருக்கும். ஒருவர் ஓவியா. அவளை படம் கீறும் வேகத்தில் ஒருவராலும் தாண்ட முடியாது. அவள் வழமையாக ஒரு நிமிடத்தில் 10 பூவின் படங்களை கீறுவாள். 2 நிமிடத்தில் 10 பறவைகளை கீறுவாள். 3 நிமிடத்தில் 10 வீடுகள் கீறுவாள். சென்ற வாரம் 10 நிமிடத்தில் 60 பூக்களும், 30 பறவைகளும் கீறினாள். அதுவே அவள் ஒரு தரத்தில் அதிகம் கீறிய படங்களாகும்.

மற்றவன் ரவி. ஒரு பூவை கீற அவனுக்கு 10 நிமிடம் எடுக்கும். ஒரு பறவை கீற 20 நிமிடம் எடுக்கும். ஒரு வீடு கீற 30 நிமிடம் எடுக்கும். சென்ற மாதம் ஒரு வகுப்பில் ஒரு வீடு தான் கீறினான். ரவி, ஓவியாவின் படம் கீறும் வேகத்தைக் கண்டு வருத்தப்பட்டார். நான் இவ்வளவு நேரம் எடுத்து படம் கீறுவதற்கு பதிலாக, ஓவியாவிற்கு உதவினால் அது கூட பயன் உள்ளதாக இருக்கும் என்று நினைத்தான்.

ஒவ்வொரு ஓவிய வகுப்பிலும் ஓவியாவிற்கு ரவி உதவுவான். வகுப்பு தொடங்கும் போது, ரவி உடனே தன்னுடைய மேசையில் ஒரு கட்டு ஓவிய தாள்களையும் வெவ்வேறு வர்ண Crayonகளையும் எடுத்து வைப்பான். ஓவியர் கீறும்போது புதிய ஒற்றை தேவைப்பட்டால், உடனே ஒரு நொடி வீணாக்காமல் எடுத்துக்கொடுப்பான். புதிய நிறம் தேவை என்றால், 'சிவப்பு' என்று கூறினால் போதும் ரவி உடனே சிவப்பு Crayon எடுத்து கொடுப்பான்.

இதனால் ஓவியாவும் ஒரு நிமிடத்தில் 15 பூக்கள் என்று கீற ஆரம்பித்தாள். வகுப்பு முடிந்தவுடன் ரவியினதும், ஓவியாவினதும் மேசைகளில் படங்கள் நிறைய இருந்தன. ஒரு நாள் ஆசிரியர் இதை கவனித்தார். ஓவியாவை நெருங்கி, 'இதெல்லாம் நீங்கள் கீறினதா?' எனக் கேட்டார். அவளும் 'ஓம்' என்று பெருமையாக கூறினான். அதே கேள்வியை ஆசிரியர் ரவியிடம் கேட்க, அவன், 'இது ஓவியா கீறியது. நான் உதவினேன்', என்று கூறினான்.

ஆசிரியர், 'ஏன் ரவி உங்களுக்கும் கீறும் தன்மை உள்ளதே'? என்றார். ரவியோ, 'ஓவியா என்னை விட வேகமாக கீறுவாளே? ஒரு நிமிடத்தில் 15 பூ கீறுவாளே?' என்றான். ஆசிரியர் ஆச்சரியப்பட்டு பின்னர் சிரித்தார். 'ரவி, ஓவியா, படம் கீறும் வேகம் முக்கியம் அல்ல, படம் வடிவாகவும், விபரமாகவும், கீறுவது தான் முக்கியம். புரிந்ததா?' என்றார். பிள்ளைகளும் 'சரி' என்று தலையாட்டினர். 'அடுத்த வாரம் எத்தனை பூ கீறுவிங்கள்?' என்று ரவி ஓவியாவைக் கேட்டான்.

அவளோ, 'பூவா? ஒரு இதழ் கூட கீறி முடிக்கமாட்டேன்', எனக் கூறி சிரித்தாள். அடுத்த வாரம் ஓவிய வகுப்பில் ஓவியாவும், ரவியும் ஒரு பூ கீறுவதற்கு 15 நிமிடம் எடுத்தது. இருவருடைய பூக்களும் அழகாகவும் விபரமாகவும் இருந்தன.

**நீதி: விபரம் இல்லா வேகம் விரும்பத்தக்கது அல்ல.**



**ஞா. ஆரணி**
அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# சார்பியல்...


31ஆம் பக்கத்தொடர்ச்சி

என்ற எடுகோளினை எடுத்திருந்தார்கள்.

கதிரவன் போன்ற விண்மீன்களும், அவற்றின் கோள்களும் கூட இந்த ஈதரில்தான் இருக்கின்றன. பொதுவாக தண்ணீர் போன்ற ஊடகங்களினுள் ஏதும் இருந்தால் அவை இயங்குகையில் அதன் தண்ணீர் அல்லது அந்த ஊடகம் தடை செய்ய முயற்சிக்கும் என்பது எங்களுக்குத் தெரியும். ஈதர் அவ்வியபினை உடையதாக இல்லை என்றார்கள். பொதுவாகவே விஞ்ஞானிகள் தமது நிலைமைகளுக்கு ஏற்றதான கருதுகோள் ஒன்றினை எடுத்து அதன் பின்னராக அக்கருதுகோளினை பரிசோதனைகளின் மூலமாக நிறுவிக்காட்டுவார்கள். சில சமயங்களில் இந்த நிறுவல்கள் செய்து முடிப்பதற்கு காத்திருக்கவும் வேண்டும். அதேபோலவே ஈதர் என்ற கருதுகோளினையும் மெய்ப்பிக்க விஞ்ஞானிகள் முயன்று கொண்டிருந்தார்கள். ஆனால் அது சுலபமானதாக இருக்கவில்லை. ஏனெனில் ஈதர் கண்ணுக்குத் தெரியாத ஊடகமாக இருப்பதால் ஆய்வாளர்களுக்கு அது சிக்கலாக இருந்தது. இந்நேரத்தில் மைக்கல்சன் எனும் அமெரிக்க விஞ்ஞானி ஈதரை இனம் காண்பதற்கான ஒரு முயற்சியை மேற்கொண்டார். இவர்தான் முதலாவது நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் ஆவார். இவருடன் மோர்லி என்ற விஞ்ஞானியும் இணைந்து இருவருமாக ஒரு பரிசோதனையைச் செய்தார்கள். இயற்பியலில் மைக்கல்சன் மோர்லி பரிசோதனை எனப் பிரபலமாகப் பேசப்படும் இப்பரிசோதனை இயற்பியலின் பெரும் திருப்பத்திற்கு அடிகோலியது


TUTORING
By Qualified & Experienced Tutors
KEEN TUTORING CENTRE
GRADE 6 - 12, IB, MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR
➢ SCIENCE, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
➢ MATH, FUNCTIONS, CALCULUS & VECTORS
➢ DATA MGT, ENGLISH & FRENCH
Call (647) 341 3975 / (647) 869 3974




YARL WINDOW
BLINDS & DRAPERY
Since 1991
VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORMWOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
CALL: N. SELVAM

We have experience to make your home more beautiful
Tel: 416.806.5397
905.201.7733



கலையரசி - 2012
யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா பெருமையுடன் அளிக்கும் கலையரசி
**காலம்:** சனிக்கிழமை, ஒக்தோபர் 06, 2012 **நேரம்:** மாலை 5.30 மணிக்கு
**இடம்:** *Markham Theatre, 171 Town Centre Blvd., Markham, ON, L3R 8G5 (Highway 7 & Warden Ave)* இல் நடைபெறவுள்ளது.
அனைத்துப் பழைய மாணவர்களையும், ஆசிரியர்களையும், நலன்விரும்பிகளையும் தமது குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.
உதயன் நடராஜா: 416-727-9945 புவனேந்திரன்: 905-940-5261
தயாநிதி: 416-421-6469 பாலேந்திரன்: 416-230-5506
www.jaffnahinducanada.com

# வித்தியானந்த வெண்பா

பட்டம் பெறச்செய்த பத்துப்பாட் டாய்வுரைகள்
பட்டுக் கிடந்ததமிழ்ப் பண்பாட்டைப் - பொட்டிட்டு
பல்லோரும் காணும் படிசெய்த வல்லவரை
நல்லார் புகழ்வார் நயந்து. (9)

பேராரிலங் கைப்பல் கலைக்கழகம் பேசுபுகழ்
சீரார் விரிவுரைஞ ராய்ச்சேர்ந்து - பேரா
சிரியருமாய் முன்னேறிச் செந்தமிழும் ஓங்க
உரிமை யுடனுழைத்தார் ஓர்ந்து. (10)

நற்பல் கலைக்கழம் நாளும் தமிழ்வளர்க்க
தற்பில் தமிழ்ச்சங்கம் தான்நிறுவி - சற்சங்கம்
நல்லுறவால் ஊக்குவித்து நற்றமிழைத் தான்வளர்த்தார்
சொல்லரிய வித்தி துணிந்து. (11)

(தற்பில் - செருக்கு இல்லாத.)

அதிக தமிழ்நூல்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகள்
மதிஞர் மகாநாட்டு மன்றில் - புதிய
கருத்துரைகள் காலத்துக் கேற்றவகை நன்கு
திருத்தமுறத் தந்தார் தெரிந்து. (12)

வித்தியா னந்தன் விவேகமார் பாணிநன்கு
பத்திமிகு மாணவரைப் பற்றிவர - எத்திசையும்
வித்தை இலக்கியத்தில் மேடைப் பொழிவுகளில்
வித்தி மலர்பூத்த வே. (13)

கணபதிப் பிள்ளைப்பே ராசிரியர் கண்ட
துணிவான மாணவரில் சூ.வீ. - துணையினையும்
தன்னுடைய திட்டங்கள் சால முடிவுறவே
நன்கு பயன்படுத்தி னார். (14)

(சூ.வீ. - இது பாட்டுக்காக இவ்விதம் நின்றது. உண்மைநிலை சு.வி. என்பது. அது சுப்பிரமயணியம் வித்தியானந்தன் என்பதன் சுருக்கம்.)

நற்பேர் நுணாவிலூர் நாகலிங்க ஆசிரியர்
கற்பார் மகளாம் கமலாவை - முற்பார்
வினையூக்கக் காதலித்து மேலோங்கு வாழ்வின்
மனையாக்கிக் கொண்டார் மகிழ்ந்து. (15)

(முற்பார் - பழைய.)

அன்ன நடையார் அலகில்லாக் கற்புடையார்
பன்னிப் பழகவல்ல பண்புடையார் - என்னை
இறிபேக்கல் லூரிதனில் ஏமுறக்கற் பித்த
அறிவுநல ஆசிரிய ராம். (16)

(பன்னி - ஆராய்ந்து. ஏமுற - மகிழ்வுற.)

என்னா சிரியரெழில் இன்சொற் கமலாவை
மன்னாதி மன்னன் மணந்தமுறை - மன்னும்
திருச்சீர் வழக்கத்தைச் சேராது செய்த
புரட்சிவழக் கென்பர் புகழ்ந்து. (17)

(மன்னதி மன்னன் - பேராசிரியர் வித்தியானந்தன். மன்னும் - நிலைபெறும்.)

அந்தணர்கள் இன்றி அறிஞர் அவைதன்னில்
சொந்தபந்த மானசிலர் சூழ்ந்திருக்க - சிந்தைநலப்
பேற்றுக் கணபதிப் பிள்ளையவர் வாழ்த்துரைக்க
மாற்றினார் மாலை மகிழ்ந்து. (18)

நந்தவன நல்லறத்தில் நன்மக்கள் ஐந்துசெல்வர்
வந்து பிறந்து வளர்மதிபோல் - எந்தவித
பொல்லாப்பு மின்றிப் புகழார் குடும்பத்தில்
வல்லவராய் வாழ்ந்தார் வளர்ந்து. (19)

சீரிழந்த நாட்டுத் திறக்கூத்துத் தேரேற
ஆர்வுறவே தொண்டாற்றி அண்ணாவி - மார்புகழும்
ஓங்கப் பலர்முன்னே ஒப்பில் சிறப்பளித்த
வேங்கை திறம்மிக்க மேல். (20)

(தொடரும்)



**கவிஞர் வி. கந்தவனம்**

# “பொருள் தேடும் பூமியில்”

வாழ்க்கை ஒரு விரித்த சாகரம். அந்த சாகரத்தின் சில துளிகளை மட்டும் எம் வாழ்நாளில் நாம் சுவைத்துவிட்டு வாழ்வைப் பற்றி ‘எல்லாமே எமக்குத் தெரியும்’ என தற்பெருமையோடு மார்தட்டுகின்றோம். ‘கற்றது கையளவு கல்லாதது உலகளவு’ என்ற பெரும் உண்மையை நாம் உணர மறுக்கின்றோம். வாழ்வை சுமையாக நினைப்பவர் எம்மில் பலர். சுகமாக நினைப்பவரோ மிகச் சிலர். சுகமோ சுமையோ வாழ்வு எம் கையில் எமக்காய் தரப்பட்ட வரம் என்பதே மெய்யான உண்மை. இன்பமோ துன்பமோ வாழ்வை நிறைவாக்கி வாழ்வது எம் கையிலேயே உள்ளது. வாழ்வில் நம் எதிரில் வரும் தடைகள் எத்தகையவையாக இருந்தாலும் அவற்றை தடையறுத்து வாழ்ந்து காட்ட வேண்டும். இதையே வாழ்வியல் தத்துவப்படி ‘வெற்றிகரமாக வாழும் கலை’ என்கின்றனர். ஆம்! வாழ்தல் ஒரு கலை தான்! அதனை எந்த நிலையிலும் இரசித்து சவாலாக எண்ணி வாழத் தெரிந்தவர்களுக்கு..மட்டுமே!

மனித வாழ்வு மாற்றங்கள் நிறைந்தது. சிலசமயங்களில் ஏமாற்றங்களும் வருவதுண்டு. வாழ்வில் ஏற்றங்களும் தாழ்வுகளும் மாற்றங்களாக மாறி மாறி வந்து போகின்றன. வாழ்வில் தன்னாலே நடைபெறும் மாற்றங்கள் ஒரு புறம்…சக மனிதர்களால் ஏற்படும் மாற்றங்கள் ஒருபுறம்’ எது மாறுகிறதோ இல்லையோ நிலையில்லா இவ்வுலக வாழ்வில் மாறாத ஒன்றாக மாற்றம் மட்டுமே இருக்கின்றது.

உலகில் வாழும் அனைத்து மனிதர்களையும் அவர்களைச் சுற்றி வாழும் மனிதர்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கின்றனர். மனிதன் மனிதனாலேயே உயர்கின்றான். சக மனிதனாலேயே சிலசமயங்களில் தாழ்கின்றான். வீழ்ச்சியை தாழ்வாக எண்ண வைப்பதும் உயர்ச்சியை உயர்வாக எண்ண வைப்பதும் எண்ணங்களின் பாங்கில் தங்கி உள்ளன. ஒவ்வொரு மனிதனின் எண்ணங்களும் தனித்தன்மை வாய்ந்தவை. அந்த தனித்தன்மைகள் மானுட மேம்பாட்டுக்கு பயன்படும் வகையில் மேம்பட வேண்டும்.

‘எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தான் அமர்ந்து வரூஉம் மேறவற்றாகும்’ என்றார் தொல்காப்பியர். எல்லா உயிர்களும் இவ்வுலகில் இன்பம் அடைதல் இயற்கை. இன்பத்தை தேடும் மனிதனையே துன்பமும் துரத்துகின்றது. வாழ்வியல் இன்பங்கள் யாவுமே இனிப்பூட்டப்பட்ட துன்பங்கள் தான் என்றாலும் அந்த துன்பச் சுமைகளை விரும்பி சுமக்கும் மனிதனுக்கு அந்த சுமைகள் யாவும் இன்பச் சுமைகளாகவே தெரிகின்றன. இதனால் மனிதன் வரவுள்ள துயர் குறித்த கவலையேதும் இன்றி மேன்மேலும் வாழ்வியல் இன்பங்களை தேடித் தேடி இன்ப துன்ப சுழலுக்குள் சிக்கி தவித்து வெளிவர வழி தெரியாமல் தவித்து இறுதியில் துன்பச் சாகரத்தில் மூழ்கிப் போகின்றான். வாழ்க்கைக் கடலுள் முத்துக்குளித்து அவன் தேடும் இன்பம் கையில் கிடைக்கையில் அதுவரை பட்ட துன்பங்களை எல்லாம் மறந்து தான் தேடிப் பெற்ற இன்பத்தினை போற்றி மகிழ்கின்றான். ஆனால் தேடும் இன்பம் கிடைக்காத போதோ துயரங்கள் பல மடங்காகி அவனை பயமுறுத்தி வருத்துகின்றன. இதனால் உள்ளத்தால் மிகவும் சோர்வுற்று சுருண்டு போகின்றான். வாழ்வியல் இன்ப துன்பங்கள் சக்கரமாய் சுழலும் தன்மை கொண்டவை. ஆனால் வாழ்வின் மெய்பொருள் தேடும் இன்பமோ இத்தகைய துயரச் சாகரத்துள் எதிர்நீச்சலிட்டு பெறப்படுவது அல்ல. அது நிலையானது. நித்தியமானது!

வாழ்வே பொருள் தேடும் போராட்டம் தானே? ‘பொருள்’ என்றால் எல்லோரும் எண்ணிவிடுவது ‘பணம்’ என்பதையே.. ஆனால் உண்மையான மெய்ப் பொருள்’ அதுவல்ல. மெய் என எண்ணி பொய்யாய் வாழும் எம் வாழ்வில் நாம் பொருள் தேடும் போராட்டத்தில் எம்மையும் எம் வாழ்வையும் தொலைக்கின்றோம். இத்தகைய புறவாழ்வு சார்ந்த ஆசைகள் நிச்சயமாய் எம்மைத் துன்பச்சுழலுள் சுழற்றி தொலைந்து போக வைத்து விடும். இதை இலக்கியங்கள் பலவகையாய் சொல்லி இருந்தாலும் இந்த ஐங்குறு நூற்றுப் பாடல் இப்படி சிறப்பாக விளக்கி இருப்பதைக் காணலாம். ஒரு இல்லத்தில் பொருளுக்காய் துயருறும் ஒரு பெண்ணின் துயரை இந்த ஐங்குறு நூற்றுப் பாடல் பின்வருமாறு விளக்குகின்றது.

‘அன்பும் அருளும் பண்பும் நீக்கி
பொருள்வயின் பிரிந்தோர்
உரவோர் உரவோர் ஆக
மடவை மன்ற வாழிய நிலனே’

புறத்தின்பம் மனிதனை துன்பத்துள் வீழ்த்துகிறது. புறத்தின்பம் பல வகைப்படும். அதில் மதுவும் ஒன்று. மது மனிதனை தனக்கு அடிமையாக்குகின்றது. உடலுக்கும் தீங்கு தருகிறது என்பதை மனிதர்கள் நன்கு அறிந்தாலும் அதை அற்ப ஆசையால் கைவிடாமல் சுவை என நம்பி மேன்மேலும் அருந்தி காலப்போக்கில் அதற்கு அடிமையாகின்றனர். அதேபோல் மனிதன் வாழ்வில் போலியான இன்ப நுகர்வுகளுக்கு படிப்படியாக அடிமையாகி மேன்மேலும் பல துன்பங்களை தானாகவே விலைக்கு வாங்குகின்றான். சுமைக்கு மேல் சுமைகளை தேடிச் சுமந்து பின் வருந்துகின்றான். போலித்துவங்கள் மனிதனை சுயமிழக்க வைக்கின்றன. இவ்வண்ணம் மனிதன் தன் தனித்துவங்களை காலப்போக்கில் இழந்தும் போகின்றான். தன்னிலை இழக்கும் வாழ்வு அதன் ‘பொருள்’ இழந்து வலி சுமக்கும் வாழ்வு ஆகிவிடும் என்பதை அவன் உணர்வதே இல்லை.

வாழ்வு என்பது ஒரு போர்க்களம். வாழ்வின் பக்கங்கள் தோறும் மாறும் களங்கள்… ஆனால் போராட்டம் முடிவதில்லை. போராடாமல் வாழ்வில்லை. வேர்கள் மண்ணில் போராடா விட்டால் மரங்கள் காய்க்கவோ பூக்கவோ முடியாது. விதைகளின் போரில் விருட்சங்கள் எழுகின்றன. இன்பம் என்ற பரிசைப் பெற மனிதர்கள் வாழ்வில் பல போர்களை போரிட்டு வெல்ல வேண்டும். நாளைய இன்பங்களைத் தரப் போகும் இன்றைய துன்பங்களும் இன்பமய மானவையே என்ற மனப்பக்குவத்தை பெற்றவன் மனம் தளராமல் போராடுகின்றான். வாழ்க்கை என்பதே இடர்களெனும் தடைகள் நிறைந்ததே. அந்தத் தடைகளை தாண்டி இலக்கினை நோக்கி மனவுறுதியோடும் மன உற்சாகத்தோடும் ஓடத் தெரிந்தவனே வாழ்வின் வெற்றியாளன் ஆகின்றான்.

வாழ்வு என்பது கவலைகளில் உழன்று காலத்தை கடத்துவது அல்ல. காலத்தை தவற விட்டு பின் வருந்துவதும் அல்ல. வாழ்வு என்பது காலத்தை வசப்படுத்தி பயன் தரும் வண்ணம் பொழுதுகளை

**சிவவதனி பிரபாகரன்**



# மறதிக்கெதிரான நினைவின் போராட்டம்

**◦ அறம் ◦ அரசியல் ◦ இலக்கியம்** | **உரைகளும் கருத்தமர்வுகளும்**

• கலாநிதி இ. பாலசுந்தரம் • பா. தேவகாந்தன் • தீபன் சிவபாலன் • ஜெனிற்றா நாதன் • கிருத்திகன் குமாரசாமி • வின்சன்ட் போல் சந்தியாப்பிள்ளை • இரா சிவரட்ணம் • பா. அ. ஜயகரன் • பால சுகுமார் • விஜய் சவரிமுத்து • ராம் சர்வேந்திரன் • பொன்னி அரசு • சுதர்சன் துரையப்பா • சதா விவேகானந்தன் • கலாநிதி பார்வதி கந்தசாமி • த. அகிலன் • கலாநிதி சுல்பிகா ஸ்மாயில் • கலாநிதி உ. சேரன் • அமரநாத் அமரசிங்கம் • ர.்.மான் ஜான்

**ஆகியோர் ஆய்வுக் கருத்துக்களை வழங்கவிருக்கிறார்கள்**

## 1ம் நாள் நிகழ்வுகள்

**October 6th, 2012 9:00 A.M**

**Scarborough Civic Centre**

**150 Borough Drive**

(North-west corner of McCowan Rd. and Ellesmere Rd.)
Scarborough (Toronto), ON. Canada
M1P 4N7

**அமர்வு:1**

- த. அகிலன், தீபச்செல்வன், யோ. கர்ணன் எழுத்துக்களுக்கூடாக போரும் அதன் தடங்களும்
- புலம்பெயர் இலக்கியம் - ஈழத்து இலக்கியம் ஒரு ஒப்புநோக்கு
- ஈழத்து நாட்டார் வழமைகளும், செவி வழி இலக்கியமும்

**அமர்வு: 2**

- கனடாவில் தமிழ் பெண்கள், குடும்ப வன்முறை
- "யானும் இட்ட தீ" - தமிழ் முதியோர் வாழ்வு

**அமர்வு: 3**

- சாதீயம்: போர் - இடப்பெயர்வு - புலம்பெயர்வு
- ஈழத்தமிழர் மத்தியில் சாதீயப் பரம்பல்
- அனுபவப் பதிவு

**அமர்வு: 4**

- கனேடியத் தமிழ் நாடகங்கள்
- வன்னியில் திரைப்பட முன்னகர்வுகள்
- ஈழத்து மரபுவழி நாடகங்கள்

**சிறப்புரை:**

**மலையக இலக்கியம்**
**மு. நித்தியானந்தன்**
(முன்னாள் விரிவுரையாளர் - இலங்கைப் பல்கலைக்கழகம்)

**ஜெய் பீம் தோழர்**
**டாக்டர் அம்பேத்கார் பற்றிய விபரணத் திரைப்படம்**
**இயக்கம்: ஆனந்த் பட்வர்தன்**

TAMIL RESOURCE CENTRE
தமிழர் வகைதுறைவள நிலையம்

## 2ம் நாள் நிகழ்வுகள்

**October 7th, 2012 2:00 P.M**

**The Church of St. Columba**

**2723 St.Clair Avenue East**

East York (Toronto), ON. Canada
M4B 1M8

**அமர்வு: 1**

- பால் - பால் அடையாளம் - பாலியல் தேர்வு
- தமிழ் இலக்கியத்தில் பாலின வேறுபாடுகள்

**அமர்வு: 2**

- போரும் பெண்களும், போருக்கு பின்னரான பெண்கள் வாழ்வு
- கனடாவில் குழு வன்முறை
- கனடாவில் தமிழர்கள்

**அமர்வு: 3**

- தமிழ் தேசியம்
- இலங்கையில் தேசிய இனங்களுக்கிடையான நல்லிணக்கணமும் சவால்களும்
- இலங்கை இடதுசாரி அமைப்புகளின் இனப்பிரச்சினை தொடர்பான பார்வை

**சிறப்புரை**

**தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லீம் மக்களின் நிலைப்பாடும் மற்றும் முஸ்லீம் மக்களின் இனத்துவம் தொடர்பான மதிப்பீடும்**

பேராசிரியர் இம்தியாஸ்
Dr. A.R.M. Imtiyaz, Ph.D
Asian Studies/Political Science
Temple University, Philadelphia

**அனைவரையும் தோழமையுடன் அழைக்கின்றோம்!**

மேலதிக விபரங்களுக்கு

thedakam@gmail.com, www.facebook.com/thedakam
647•891•8597, 416•731•1752, 647•702•8603

# வேகமான சிந்தனை வாழ்வுக்கு வெற்றிதரும்

வேகமான சிந்தனையும் வேகமான செயற்பாடும் இன்று மனித குலத்திற்கு மகிழ்ச்சியான வாழ்வினை தந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு துறைகளிலும் வேகமான சிந்தனையாளர்களே சாதனைகள் பல புரிந்துள்ளனர். பொதுவாக மகா என்ற அடைமொழி கொண்டவர்களது வாழ்வினை அவதானித்தால் அவர்கள் வாழ்வு முழுவதும் வேகமாக செயல்பட்டவர்களாயிருப்பர். மகா அலெக்சாண்டர், மகாஅக்பா, மாவீரன் நெப்போலியன், மகாகவி பாரதி, மகாகவி கம்பர், மகாகவி காளிதாஸ், மகாகவி ரவீந்திரநாத்தாகூர், மகாகவி உருத்திரமூர்த்தி, மகாத்மா காந்தி இப்படி எத்தனையோ பேர் விவேகமும் வேகமும் கொண்ட சிந்தனையாளர்களாக விளங்கியுள்ளனர். எந்த ஒரு செயலையும் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டால் வேகம் தானாக வந்து விடும். முல்லைக்கொடி படருவதற்கு, அதன் தவிப்பை உணர்ந்து தனது தேரை உடனேயே அங்கு விட்டு விட்டு வந்த பாரியின் கொடை வேகம் முதலாக வானவெளிக்கு விண்கலங்களை வேகமாக அனுப்பி வருகின்ற விஞ்ஞான சிந்தனையாளரின் வேகஉணர்வு வரை எத்தனையோ சம்பவங்களை இவ்வுலகு சந்தித்துள்ளது.

சூரியனை பூமி சுற்றிவரும் வேகமும் பூமியை சுற்றிவரும் சந்திரனின் வேகமும் என்றும் மாறாதது. எமது ஞாயிற்று தொகுதியிலுள்ள எல்லா கோள்களின் வேகம் கூட என்றும் மாறியதில்லை. ஆனால், மனிதகுலத்தின் அசுரவளர்ச்சி என்பது சிந்தனை வேகத்தால் ஏற்பட்டது தான். எந்தத் துறையிலும் வேகம் போட்டியிட்டு கொண்டுள்ளது. போக்குவரத்து, வீடமைப்பு, நூல் வெளியீடு, தகவல் தொடர்பு, திரைப்படத்துறை, மேடைப்பேச்சு, உணவு உண்ணுதல் என்பவற்றால் வேகம் தனது செல்வாக்கை நிலைநாட்டி வருகிறது.

போக்குவரத்து துறையில் எழுந்துள்ள வேகம் மிகவும் அபாரமானது. மாட்டு வண்டில் தான் எமது பழையவாகனம். தொடர்ந்து கண்டு பிடிக்கப்பட்ட எண்ணுக் கணக்கற்ற வாகனங்கள் மனிதர்களை அங்கும் இங்குமாக ஏற்றிச் செல்கின்றன. சைக்கிள் வாகனம் அன்றிலிருந்து இன்று வரை உதவுவது சீனாவில் வேலைக்கு செல்பவர்களால் பலர் சைக்கிள் வண்டியிலேயே செல்கின்றனர். அது அவர்களுக்கு அளவில்லா மகிழ்ச்சியை தருகிறது. எனினும் சனப்பெருக்கம் காரணமாக பேருந்து, மகிழுந்து, தொடருந்து, லொறிகள், டிரக்குகள், வானூர்திகள் என்றவாறு பல போக்குவரத்து வாகனங்கள் அறிமுகமாகின. இன்று இதிலும் வேகமே மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சீனாவில் மின்காந்த ரயில் பெய்ஜிங் ஷங்காய் நகரங்களுக்கிடையில் மணிக்கு 430 கி.மீற்றர் வேகத்தில் செல்கிறது. ஜப்பானில் மின்காந்த ரயில் 320 கி.மீற்றர் வேகத்தில் செல்கிறது. அதிவேக ரயில்கள் தொடர்ந்தும் வேகத்தை அதிகரிக்கின்றன. இந்த வேகம் எங்கு சென்று முடியுமோ தெரியவில்லை. சாதாரண வண்டிகளை விட அதிவேக (Express) வாகனங்களில் பலர் பிரயாணம் செய்ய விரும்புகின்றனர். அவசரம் என்பதால் ஏற்படும் நிகழ்வு இது. நிலக்கரிப் பாவனையிலிருந்து மின்காந்தம் பாவனை வரை மாறியிருக்கும் போக்குவரத்து முறை உலக சூழலை வெகுவாக



மாற்றி வருகின்றது.

தகவல் தொடர்பில் ஏற்பட்ட வேகம் அளவிடமுடியாத தொன்று. ஆரம்பத்தில் தொலைபேசியில் பேச எண்களை விரலை விட்டு சுழற்ற வேண்டும். தொடர்பு கிடைக்கவில்லையென்றால் திரும்ப திரும்ப சுழற்ற வேண்டும். கைவிரல் வலிக்க பேசுவதனையே விட்டுவிட வேண்டும். கிரஹாம் பெல் கண்டுபிடித்த தொலைபேசி இன்று யார் யாரோ கைபட்டு எத்தனையோ வடிவங்களில் மாறியுள்ளது. உலகில் எங்கு வேண்டுமானாலும் எங்கிருந்தும் பேசலாம். எண்களை அழுத்தியவுடன் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தும் குரல்வரும். ஒருகாலத்தில் சுவரில் அமைக்கப்பட்ட தொலைபேசி இன்று வெவ்வேறாக மாறி தலையணைக்கு கீழாகவும் படுத்திருக்கிறது. நினைத்துப் பார்க்க முடியாத நெஞ்சை நெகிழவைக்கும் வேகம் இது. கடைகளில் இனிப்பு பண்டங்களை போல் செல்போன்கள் விற்பனையிலுள்ளன. இதனால் கட்டணங்கள் குறைந்தன. இன்று செல்போன்கள் இல்லாதவர்களே இல்லை என்றாகிவிட்டது. சேட் போட மறந்தாலும் செல்போனை காற்சட்டைப் பைக்குள் பலர் கொண்டு திரியும் காலமிது. ஒரே வீட்டில் பல போன்கள் பல்வேறு வடிவங்களில், பல்வேறு செயல்பாடுகளில் பயன்படுகின்றன. காரியாலயங்களை எடுத்துக்கொண்டால் ரெலிபிரிண்டர் ஆரம்பித்து பின்பு தொலை-நகல் வசதி வந்து கணினி முறை புகுந்து அதன்மூலம் இணையத்தளங்கள் ஏற்பட்டு இன்று ஸ்கைப் முறை மூலம் எதிர்முனைகளில் ஒருவரையொருவர் பார்த்து பேசும் நிலைக்கு வந்துள்ளது. வேகம், விவேகம் இரண்டும் இங்கு தொழில்பட்டுள்ளன. கடிதங்கள் எழுதுவதில் எவருக்கும் நாட்டமில்லை. பணம் கூட உடனடியாக அனுப்ப முடிகிறது. தற்போதுள்ள இந்த வேகம் நாளைக்கு போதாமல் இருக்கலாம். அப்போது இன்றும் கூடிய வேகம் தேவைப்படலாம். அங்கவீனர்கள் கூட கணினியை பயன்படுத்த வழிகள் உள்ளன. எண்ண அலைகளில் கூட கணினி இயங்கும் காலம் வந்தே தீரும். மனிதனின் மனோ வேகத்துக்கும் ஆசைக்கும் எல்லையே இல்லை. மனித மூளையின் கண்டு பிடிப்புக்களின் வேகம் தகவல் தொடர்பு துறையை வெகுவாக மாற்றியுள்ளது. வேகம் வெற்றியை மட்டும் தரவில்லை. மகிழ்ச்சியையும் சேர்த்து தந்துள்ளது.

கட்டிட அமைப்புக்களில் வேகம் இன்றுள்ள புதிய சூழ்நிலை. அன்று உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலை கட்டி முடிக்க எடுத்த ஆண்டுகள் 21 ஆகும். இதில் 20 ஆயிரம் தொழிலாளர் வேலை செய்தனர். இதன் உயரம் 220 அடி. இது யமுனை நதியிலுள்ள ஆக்ராவில் கட்டப்பட்டது. வடிவமைப்பு செய்தவர் ஐரோப்பிய சிற்பி. கட்டியவர் துருக்கியை சேர்ந்த உஸ்தாத். இத்தாலிய சலவைக் கற்களால் இது கட்டப்பட்டது. உலக அதிசயத்தை உலகுக்கு அளிக்க முனைந்த சாஜகானை இணைத்துள்ளது. அடிக்கல் நாட்டப்பட்டு கட்டப்படாத கட்டிடங்களும், கட்டிடம் கட்டப்படாது முடிக்கப்படாத கட்டிடங்களும் பல உள்ளன.

'கட்டிடம் கட்டுவது உயர்ந்த கலையாகும்' என்று கட்டிடக்கலைஞர் லாங்பெல்லோ என்பவர் கூறுகிறார். அதிலும் வீடு கட்டுவது இந்த நூற்றாண்டின் வேகமான தொழிற்பாடு ஆகும். எத்தனையோ கஷ்டங்களுக்கூடாகவே ஒரு வீடு கட்டப்படுகிறது. வீட்டை கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார் என்பது பழமொழி. பின்தங்கிய நாடுகளில் மனித வலுவே வீடுகட்ட பாவிக்கப்படுகின்றது. பாரிய இயந்திரங்களே அனேக இடங்களில் பாவனையில் உள. எனினும், இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழ்ந்த ஜி.டி நாயுடும் ஒரே நாளில் வீடு கட்டிய அதிசயமனிதர் என்று அழைக்கப்பட்டவர். பேரறிஞர் அண்ணா இவரது வீட்டின் தொடக்கவிழாவில் பங்கு பற்றி மாலையில் திறப்பு விழாவுக்கும் சென்றிருந்தார். இது சென்னையில் உள்ள மூர்மார்க்கெட்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டது. எல்லா பொருட்களும் ரெடிமேட்டாக இருந்த படியால் இது முடிந்துள்ளது. எனினும் ஜி.டி நாயுடுவின் விவேகமும் வேகமும் இதில் இணைந்துள்ளது. உண்மையில் இது ஒரு அதிசயமான செயல்தான். மேலைநாடுகளில் விண்ணளவும் கட்டிடங்கள் பல எழுகின்றன. நுட்பமான படவரைகலை, இயந்திர பாவனை, காலநிலை என்பவற்றை அவதானித்து கட்டிடங்கள் எழுகின்றன. சீனா கட்டிக்கலையில் முன்னணி வகிப்பதற்கு காரணமே விவேகமும், வேகமும் கொண்ட சிந்தனை தான். 45-60க்கும் இடைப்பட்ட நாட்களில் 20 மாடிக்கட்டிடத்தினை முடித்து விடுகிறார்கள் என்றால் எவராலும் கற்பனை செய்ய முடியாது. காரணம் ஒரே அளவு கொண்ட சமத்துவமான முறையில் இவர்கள் வீடுகளை கட்டுகின்றனர். சமதர்ம உணர்வு வீடுகளிலும் உள்ளன. கீழைத்தேச நாடுகளில் தமது அந்தஸ்தினை வெளிக் காட்டவே வீடுகளை அமைக்கின்றனர். வீட்டைக்கட்டிப்பார் என்ற பழமொழிக்கு பிரியாவிடை வைக்கலாம் போல் உள்ளது.

வேகமாக செயல்படும் விதத்தில் சினிமாவும் முக்கியம் பெறுவதாகும். சாதாரணமாக ஒரு திரைப்படம் தயாரிப்பதற்கு பல வருடங்கள் எடுத்தன. மிகவும் கடினமான செயலாக இத்துறை இருந்துள்ளது. கலைஞர்களின் ஒத்துழைப்பு மட்டுமல்ல காலநிலையின் ஒத்துழைப்பும் இதற்கு தேவையாகும். நவீன கமெராக்கள் இல்லாத காலங்களில் பல படப்பிடிப்புக்கள் நடைபெறுவதில்லை.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 38ஆம் பக்கம்



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப் பொருட்களை வழங்குவது




Niru Enterprises Inc
40 Minuk Acres
Scarborough, ON M1E 4Y6
Canada
Tel: 416.750.1976
Fax: 416.750.8779
www.niru.com

Niru Niru
நிரு
பிராண்ட்

# வேகமான...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

படப்பிடிப்பாளர், நடிகர்கள், வசனகர்த்தா, ஒளிப்பதிவாளர் ஆகியோர் எல்லோரும் ஒன்று சேர்ந்தாலே படப்பிடிப்பு நிகழும். ஒருவர் இல்லாது விட்டாலும் அன்றைய படப்பிடிப்பு ரத்தாகும்.

குறிப்பிட்ட காலத்தில் திரைப்படம் வெளியிட முடியாதும் இருந்தது. உதாரணமாக 'ஹரிதாஸ்' படம் ஒரே பிரிண்டை வைத்துக் கொண்டு சென்னையில் இரண்டு தியேட்டர் களில் திரையிட்டுள்ளனர். முக்கால் மணி நேரம் ஒரு தியேட்டரில் படம் திரையிடப் பட்டு முதல் ரீல் முடிந்ததும் உடனடியாக அடுத்த தியேட்டருக்கு கொண்டோடிச் செல்வர். அங்கு முக்கால் மணிநேரம் கழித்தே படம் ஆரம்பிக்கும். தாயகத்தில் கூட இப்படித்தான் நடைபெற்றுள்ளது. இப்பொழுது இதனை கற்பனை செய்யமுடிய வில்லை. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் எங்கேயோ சென்றுள்ளது. ஒரே சமயத்தில் உலகிலுள்ள பல தியேட்டர்களில் திரைப்படங்கள் வெளியாகின்றன.

'நெஞ்சில் ஓர் ஆலயம்' திரைப்படம் 15 நாட்களில் தயாரிக்கப்பட்ட அற்புதமான படம். எனினும் நூறு நாட்களை தாண்டியும் ஓடியது. இங்கும் வேகம் பெற்றிருந்தது. இதனையும் முறியடித்து, 'சுயம்வரம்' என்ற படம் 1 நாளில் தயாரிக்கப்பட்டது. இசையமைப்பாளர்கள், 10 இயக்குனர்கள் தயாரித்த படத்தில் 5 பாடங்களும் இருந்தன. 56,000 அடிநீளம் கொண்ட இப்படத்திற்கு 3059 பேர் உதவினர். 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம்திகதியில் படப்பிடிப்பு ஆரம்பித்து 14 கமெராக்கள் இயக்கப்பட்டு மறுநாள் காலை 6.58 க்கு முடிக்கப்பட்டது. எடுத்துக்கொண்ட நேரம் 23மணி 58 நிமிடங்கள். திரையுலகில் இது ஒரு அசைக்க முடியாத சாதனையாகும். வேகமான செயற்பாடே இங்கு காரணம். இதேபோன்று நடிகர்திலகம் சிவாஜி கணேசன், கண்ணாம்பாள் ஆகியோர் நீளமான வசனங்களை தெளிவான குரலில் வேகமாக பேசி நடித்தனர். பின்பு வந்த எவராலும் இந்த சாதனையை முறியடிக்க முடியவில்லை. தமிழ் தெரியாத நடிகர்களுக்கு டப்பிங் குரல் வழங்கி வருவதே இன்றுள்ள நிலை. ஒவ்வொரு வசனத்துக்கும் ஒவ்வொரு ரேக் எடுக்க வேண்டியுள்ளது. சிரிப்பு வசனங்களை வேகமாக பேசி அசத்தியவர்கள் பலர் இன்றும் தங்கவேலுவை, நாகேஷை ஒருவராலும் மறக்க முடியவில்லை.



காரணம் அவர்களது விரைவான பேச்சுத்தான். சண்டைக்காட்சிகளிலும் கண்டிப்பாக வேகமே தேவையாகும். தற்போது கண்மூடி விழிப்பதற்குள் பல தடவை குத்துவிடும் நடிகர்கள் உளர். இதில் தொழில் நுட்பமும் மிகவும் உதவுகிறது.

சிந்தனையில், கவி புனைவதில், எழுதுவதில் வேகம் காட்டியவர்கள் பலர். எமது நினைவுக்கு வருபவர்களில் எல்லாவற்றிற் கும் உதாரணமாகி நிற்பவர் மகாகவி பாரதியார். 1882 இல் பிறந்து 1921 இல் இறந்த அவர் வாழ்ந்த காலம் 39 ஆண்டுகள் தான். தனது 15 வயதில் 7வயது செல்லம்மாளை மணந்தவர். தனது 11ஆம் வயதிலேயே தான் எழுதிய கவிதையை எட்டையபுரம் சமஸ்தானத்தில் காண்பித்து 'பாரதி' என்ற பட்டம்பெற்றவர். அரசவைக் கவிஞர், சுதேசமித்திரர் துணை ஆசிரியர், இந்தியா, பாலபாரதம் இதழ்களின் பொறுப்பாசிரியர் பதவி வகித்ததுடன் தேசபக்தியும், சுதந்திர உணர்வும் கொண்ட பாடங்களை மிக வேகமாக எழுதிக் குவித்தவர். பாரதியின் மனோவேகம் மிகவும் உயர்வு பெற்றிருந்தது.

பேச்சில் வேகத்தை காட்டியவர் அறிஞர் அண்ணா. சென்னையை தமிழ்நாடு என மாற்றிய அவர் எழுதுவதிலும், பேசுவதிலும் மிகவும் திறமை வாய்ந்தவர். அடுக்குத் தொடர்களையும் அறிவான கருத்துக்களை யும், புள்ளிவிபரங்களையும் சொல் நயத்தாலும் நா நயத்துடனும் எடுத்து சொன்னார். அதிகாலை இரண்டு மணிவரை கூட பட்டி தொட்டி எங்கும் பேசியவர். அவர் ஆங்கிலத்திலும் சரளமாக பேசியவர். தமிழ் நூல்களையும் ஆங்கில நூல்களையும் படித்து சுவைத்தவர். அவரை ஒரு தடவை இங்கிலாந்தில் பேச அழைத்தார்கள். அவரை சோதனையிட 'ஒன்றுமில்லை' (Nothing) என்ற தலைப்பில் பேசப் பணித்தார்கள். அவர் மளமளவென்று பேச ஆரம்பித்தார். 'Nothing will be England without India' என்று ஆரம்பித்து பேசத்தொடங்கினார். அவருக்கு 'இந்நாட்டு இங்கர் சால்' பட்டம் வழங்கப்பட்டது. நாளிதழ்கள், கட்டுரைகள், கதைகள், நாடகங்கள், சினிமாக்கள் மூலம் தன் கருத்தினை வேகம் பெற செய்தார் அவர்.

விளையாட்டுத் துறையிலும் வேகம் மிகவும் முக்கியமானது. குறிப்பாக கிரிக்கெட் மிகவும் முதன்மை பெற்றுள்ளது. வேகப்பந்து வீச்சாளர்கள், சுழல்பந்து வீச்சாளர்கள் முக்கியம் பெறுவார்கள். அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள், இந்தியா, பாகிஸ்தான், சிறீலங்கா போன்ற நாடுகள் இத்துறையில் மிக பிரபல்யம் பெற உதவியது அவர்களது அபராமான ஆட்டங்களேயாகும். அவுஸ்திரேலியா தொடர்ந்து உலகக் கோப்பையை பெற்று சாதனை புரிந்துள்ளது. அவர்களது மனோ உறுதியும், மனோ வேகமும், உடல் உறுதியும், உடல் வேகமும், ஒற்றுமையும் என்று பேசப்பட்டு வருகிறது. எனினும் பல நாடுகள் தற்போது களத்தில் வெற்றிகளை குவிக்கின்றன.

வேகம் பற்றி சிந்திக்கும் போது கணித மேதை சகுந்தலா தேவியே நினைவுக்கு வருவார். கணக்கு பாடம் சிலருக்கு கணக்கு விடுவதுண்டு. ஆனால் இவருக்கு அது ஒரு சந்தோசமான நிகழ்வு. கல்குலேட்டர், கணினி என்பவற்றால் கண்டுபிடிக்க முடியாத செயலை நிகழ்த்திக்காட்டியவர். 13 இலக்கம் கொண்ட ஒரு எண்ணை மற்றொர் 13 இலக்கம் கொண்ட இலக்கத்தை பெருக்கக் கூறினார்கள். இதற்கு கொடுக்கப்பட்ட நேரம் ஒரு நிமிடம். ஆனால் அவர் எடுத்துக்கொண்டது 28 விநாடிகள். 76, 86, 36, 97, 74, 870 x 24, 65, 09, 97, 45, 779 என்பதே இலக்கம். விடை 1, 89, 47, 66, 81, 77, 99, 54, 26, 27, 73, 730 என்று கூறினார். மலைப்புள்ள இக்கணக்கினை மனதினால் பெருக்கினார். சகுந்தலா தேவியின் மூளை வேகம் எப்படி யானது என்று எவராலும் கூற முடியாது.

காலம், உழைப்பு, வேகம் இன்று மிகவும் தேவை. ஒரு நாளில் 24 மணித்தியாலங் களே உள்ளது. அதற்கேற்பவே வேகமான சிந்தனையும் அதற்கேற்ற உழைப்பும் அமைய வேண்டும். மனிதகுலத்தில் ஒரு வேகமான ஓட்டப்பந்தயம் நிகழ்கிறது. இதற்கு ஏற்ப வேகமாக செயல்பட வேண்டியுள்ளது. உணவையே துரிதமாக வயிற்றுக்குள்ளே தள்ளிக் கொண்டிருக்கின்ற மனித இனம் ஒவ்வொரு கணமும் வேகமாக சென்று கொண்டிருக்கிறது. வேகம் அதிவேகம் என்பதே இன்றுள்ள சூழ்நிலை.

# பொருள்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

வளப்படுத்துவதாகும். வாழ்க்கை வாழும் வரை அஸ்தமிப்பதில்லை. என்று எம்மால் இனி வாழமுடியாது என நம்பிக்கை இழக்கின்றோமோ அன்று வாழ்வு இருந்தாலும் இறந்தாலும் முடிந்து போகிறது. வாழ்வில் நாம் விழ்கின்ற பொழுதில் எல்லாம் தன்னம்பிக் 'கை' என்ற மூன்றும் கையை ஊன்றி எழப்பழக வேண்டும் வீழ்வது தோல்வியல்ல. வீழ்ந்த இடத்தில் இருந்து மீண்டும் எழத் துணியாதிருப்பதே தோல்வி. விதைகள் மண்ணில் வீழ்வது மீண்டும் வீறு கொண்டு விருட்சமாய் எழவே. வீழாமல் வாழ்வில்லை. வீழ்ச்சிகளை எழுச்சிகளாக மாற்றுவதே வாழ்வின் வெற்றி.

ஆனால் வெற்றி என்பது இலகுவில் பறிக்கும் கனி அல்ல. வெற்றிக்காக வாழ்க்கையோடு போராட அறிவும் நம்பிக்கையும் உதவுகின்றன. அரைகுறை அறிவும் அரைகுறை நம்பிக்கையும் ஆபத்தானவை. உலகில் நாம் யாரை நம்பாது போனாலும் எம்மை நாம் உறுதியாக நம்பவேண்டும் தன்னம்பிக்கையே வாழ்வின் ஆதாரம். அறிவுத்தேடல் வாழ்வுக்கான ஊட்டம்.

எம் தோல்விகளுக்கு காரணம் வேறு யாரும் அல்ல. நாமே தான். சரியான முயற்சிகளை தேவையான அளவு எடுக்காதிருத்தல், தவறான வீண் முயற்சிகளில் ஈடுபடுதல், கவனம் சிதறுதல், கவலையீனமாக இருத்தல் என பல காரணங்களை சொல்லாம் 'தீதும் நன்றாம் பிறர்தர வாரா' எத்தகைய நிலையிலும் நாம் மனத்தை ரியத்தை இழக்கலாகாது. மனத்துணிவை இழப்பதால் தான் பலர் வாழ்வில் தோற்றுப் போகின்றனர்.

'பலமே வாழ்வு, பலவீனம் மரணம்' என்று விவேகானந்தர் சொன்னது போல் நாம் எம்மனதை எந்நிலையிலும் வலிமை கொண்டதாய் பேண வேண்டும். மனவுறுதி கொண்டவனுக்கு வாழ்வு ஒரு விளையாட்டுக் களம். வெற்றி தோல்விகள் எது வந்தாலும் சமநிலை குன்றாது வாழப் பழக வேண்டும். உறுதியான உடலில் தான் உறுதியான உள்ளம் இருக்க முடியும் என்பர். ஆனால் உடலைவிட மனமே உறுதியாக இருக்க வேண்டியது. மனம் உறுதியானால் வாழ்வு தளம்பல்கள் இன்றி குழப்பங்கள் இன்றிப் பயணிக்கும்.

உலகில் பிறக்கும் ஒவ்வொரு உயிரும் வாழ்தலுக்கு உரிமை உடையவை. மனிதன் இதர உயிரினங்களைவிட உயர்ந்த நிலையில் வாழ்பவன். 'வாழ்வு' 'தாழ்வு' என்ற சொல்லின் எதிர்ப்பதம். வாழ்வை அதன் அன்றாட நிலை களில் இருந்து வளர்த்து மனநிறைவோடு வாழும் போதே அதை 'வாழ்கிறோம்' என கொள்கின்றோம். நாம் வாழ்வதை ஒருபோதுமே 'தாழ்கிறோம்' என சொல்வதில்லை 'வாழ்கிறோம்' என சும்மா வாய் வார்த்தையா-கச் சொன்னால் போதாது. பெருமையாகச் சொல்லும்படி எம் வாழ்வை தரம் உயர்த்தி வாழுதல் ஒவ்வொரு மானிடனினதும் கடனாகும். வாழ்வை மகிழ்வோடு வாழ்பவன் வாழ்வை இரசிக்கின்றான். மகிழ்சி என்பது அவரவர் மகிழ்வை உணரும் பார்வையிலேயே உள்ளது. ஒரு மனிதன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகவே மாறிவிடுகின்றான். நல்லதை நினைப்பவன் நன்மைகளை காண்கிறோன். தீயதை நினைப்பவனோ தீமைகளை சந்திக்கின்றான். ஒவ்வொரு செயலுக்கும் எம் எண்ணங்களே காரணம். எண்ணங்களே செயல்களின் மூலகாரமாய் விளங்குகின்றது.

'முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்' என வள்ளுவர் கூறியது போல் வாழ்வை வரமாக்க வேண்டுமானால் வாழ்வில் முயற்சிகளை தொடர்ந்த வண்ணம் இருக்க வேண்டும். முயன்றால் வாழ்வு நிச்சயம் கையில் கிடைத்த வரமாகவே மாறி பெருமை தருவது உறுதியாகும்.

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லால்
வேறொன்றும் அறியேன் பராபரமே'

என தாயுமானவர் கூறியது போல் பிறரையும் மகிழ்வித்து நாமும் மகிழ்வோடு அழகாக வாழ்ந்திடுவோம். அதுவே வாழ்வினை மகிமைப்படுத்தும் உயர் பொருளாகும்.

வாழ்வு என்பது எவ்வளவு காலம் வாழ்கிறோம் என்பதில் அழகு படுவதில்லை. எப்படி வாழ்கிறோம் என்பதிலேயே பொருள் கொள்கிறது வாழ்வில் உயர் 'பொருள்' தேடி அருள் பொங்க வாழ்ந்திடுவோம்.

மாணிக்கவாசகர் வீதி
கரவெட்டி மத்தி, கரவெட்டி

### நன்றி கூறுதல் தொடர்பான கடிதம்

மதிப்புக்குரிய தங்களுக்கு நடராஜா ஸ்ரீகாந் ஆகிய நான் மிகவும் மகிழ்ச்சியாக தெரிவிக்க விரும்புவது யாது எனில் உங்களால் எனது மகளான கிஷானியாவின் சத்திரசிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள $4180 தொகையினை பெற்றுக்கொண்டுள்ளேன். சத்திர சிகிச்சைக்காக முன்பணமாக 500,000 கட்டியுள்ளோம். இதனால் நானும் எனது குடும்பத்தாரும் உங்களுக்கும் உங்கள் சார்ந்தவர்களுக்கும் மிகவும் நன்றி கூறுவதில் மனமகிழ்ச்சி அடைகின்றோம். உங்களுக்கு எங்கள் குடும்பம் என்றென்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது. இதனால் நாங்கள் மிகவும் சந்தோஷமடைகின்றோம். இத்துடன் உங்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள பணவுதவியின் மூலம் எங்கள் பிள்ளைக்கு சத்திரசிகிச்சை வெகுவிரைவில் செய்யப்படவுள்ளது. உங்கள் உதவி மூலம் எங்கள் பிள்ளைக்கு காது கேட்டு கதைக்கப்போவதையிட்டு எங்கள் உள்ளம் மகிழ்ச்சி அடைகின்றது. இதனால் உங்களுக்கும் உங்கள் நிறுவனத்துக்கும் நாங்கள் மீண்டும் மீண்டும் நன்றி கூறுகின்றோம்.

உண்மையுள்ள நன்றியுள்ள
நடராஜா ஸ்ரீகாந்

மேலதிக விபரங்களுக்கு லலிதா புருடி - 905.270.1214

# புதிய இசைச் சாதனை படைத்த பவதாரணியின் பாரதி கலைக்கோயில்

பவதாரணியின் பாரதி கலைக் கோயில் குழுவினரின் 48 மணி நேர இடைவிடாத இன்னிசை மழை சாதனை நிகழ்வு கடந்த 21, 09, 2012 வெள்ளிக்கிழமை நண்பகல் ஆரம்பித்து 23, 09, 2012 ஞாயிறு நண்பகல் நிறைவுற்றது.

ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்த சாதனை மூலம் 56,350 டொலர் நிதி சேகரிக்கப்பட்டு ஸ்ரோ.:.ப்வில் மருத்துவமனைக்கு



மார்க்கம் கவுன்சிலர் லோகன் கணபதியின் ஏற்பாட்டில் அவரது நகரவை மன்றத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடகர்களின் துணையுடன், முப்பதுக்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்களால் வெகு சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது. மார்க்கம் மேயர் Frank Scarpitti, கவுன்சிலர் லோகன் கணபதி, நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் மற்றும் மார்க்கம் ஸ்ரோ.:.ப்வில் மருத்துவமனையைச் சேர்ந்த ஆலன் பெல்

நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இதில் 5000 டொலர்களை கனேடிய தமிழர் பல் வைத்திய அமைப்பு வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. இறுதி நிகழ்வின் போது இசைச் சாதனை புரிந்த பாரதி கலைக்கோயில் இளம் கலைஞர்கள் அனைவருக்கும் மார்க்கம் மேயர் Frank Scarpitti மற்றும் கவுன்சிலர் லோகன் கணபதி ஆகியோர் சான்றிதழ் வழங்கி கௌரவித்தனர்.

இந்நிகழ்வின் போது உரையாற்றிய பாரதி கலைக் கோயிலின் அதிபர் மதிவாசன் அவர்கள் "தமது குழந்தைகள் தொடர்ந்தும் இது போன்ற நற்பணிக்காக மற்றுமொரு தேசிய அளவிலான சாதனைச் செய்ய உள்ளார்கள்" எனக் குறிப்பிட்டார்.

# ஸ்காபரோ றூஜ் றிவர் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் நடத்திய ஒன்றுகூடல்

ஸ்காபரோ றூஜ் றிவர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் தனது தொகுதி

நடத்தியிருந்தார். பல நிறுவனங்கள், சங்கங்களுடன் பல நூற்றுக்கணக் கான மக்களும் கலந்து கொண்டனர்.



மக்களுக்காக வருடாந்த BBQ ஒன்றுகூடலினை கடந்த ***September 15, 2012*** சனிக்கிழமை அன்று

இதில் எல்லா வயதினருக்கும் ஏற்றவாறு செயற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.




MORTGAGE NEEDS....
Subo Thevarajah, AMP
Mortgage Agent
License# M08002859
416.627.2222
subo@bmsic.com
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
MCAP

BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Thayalan (Thaya) Gobalakrishnan Mortgage Agent(GTA) Lic No : M12001612
* New Mortgages * Refinance * Second Mortgages
Call me for any Mortgage Financing questions?
Cell: 416-575-3211 ,Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@gmail.com

"Let me help you make the right choice"
SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்
SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2
*Independently Owned & Operated

Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable
Low Mortgage Rates
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

RealEstate / Mortgage / Investments
SCAR GOLF CLUB KINGSTON
Bedrooms: 4
Washrooms: 3
1 Year old
$489,900
BRAMPTON
Bedrooms: 3
Washrooms: 3
Bsmt: Finished
$399,900
9TH LINE & 14TH AVE
Bedrooms: 4
Washrooms: 3
$799,900
3 Months old
HWY 06 HALDIMAND
Restaurant + Motel for sale.
$549,900
MCCOWAN HWY 401
Bedrooms : 2
Washrooms: 2
$249,900
QUEEN CREDITVIEW
SOLD
Bedrooms : 4+1
Washrooms: 6
$1,187,500
RE/MAX Vision Realty Inc. Brokerage.
A. Anton Jeeva B.Eng
416.575.5055
Real Estate / Principal Mortgage Broker
Specialized in bank sale homes
Tridel's Preconstruction condos in downtown available
Mortgage can be arranged as low as 2.85%
*Independently owned and operated
Office: 416.321.2228
E-mail: anton.jeeva@gmail.com, Web: Antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6

விஜயதசமி அன்று (Oct. 24, 2012) உங்கள் வீட்டிற்கு அருகாமையில் நாட்டியம் பயில்வதற்கு ஒரு அரிய வாய்ப்பு
நிருத்திய கலாக்ஷேத்திர அதிபரும், பரதநாட்டிய கலைமணியும், பரதகலா வித்தகியுமான
ஆசிரியை ஸ்ரீமதி. செல்வானந்தி சுகுமார்
அவர்களால் புதிய பரதநாட்டிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
நடைபெறும் இடங்கள்
Ajax: (Taunton & Middlecote)
Markham: Markham & Elson
14 Th Ave & 9Th Lane (Legacy Dr)
Stouffville: (9Th line & Hoover Park)
Scarborough: Middlefield & Finch
Mclevin & Neilson
Stainess & Season
416.278.5345 / 416.754.9047

ON THE SPOT
HOME INSPECTIONS INC.
Danny Sripath, B.Sc.
Qualified Home Inspector
Mold Specialist
416.823.3552 / 416.289.0033
onthespothome@yahoo.ca
No 80 Corport Dr, Unit #201
Toronto ON M1H 3G5
InterNACHI
IAC2 CERTIFIED Mold CERTIFIED
CanNACHI

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES